உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—உஅ] சுக்கில-ஹூ தைமீ [பகுதி—௩.
Vol. XXVIII. January--February-1930. No. 3.

தொல்காப்பியச் சூத்திரப்பொருளாராய்ச்சி.

[ப்ருஹ்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் எழுதுவது.]

"வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே
வினையின் றொகையே பண்பின் றொகையே
யும்மைத் தொகையே யன்மொழித் தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே."

என்பது சூத்திரம். இதனுள், உருபுதொகுதலேயன்றி, இருசொல்லு மொட்டிநிற்றலும் தொகையினிலக்கணமாம் என்பது உரையாசிரியர் கருத்து என்றும், அது, "பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப" என்னும் (தொல் - எழுத் - சகஉ-ம்) சூத்திரவுரையுள், 'பெயரும் பெயரு மாகக் கூடியிசைப்ப' என அவருரைத்ததனாற் பெறப்படும் என்றும் செந்தமிழில் வெளிப்படுத்திய குறிப்பினுள், (தொகுதி—உஎ,—பகுதி—கக,—பக்—ருகூரு) குறிப்பாசிரியர் உரைத்துள்ளார்கள். 'நிலத்தைக் கடந்தவன்' என்பது போல உருபுதொகாது பெயரும் பெயரும் கூடிநின்றனவும் ஒருங்கிசைக்கும் என்பதும் உரையாசிரியர்க்குக் கருத்தாமாதலானும், நிலங்கடந்தான் என்பது போல உருபுதொக்குப் பெயரும் வினையுமாகக் கூடியன ஒருங்கிசைக்கும் என்பது அவர்க்குக் கருத்தன்றுமாதலானும், ஒருங்கிசைத்தலும் தொகையினிலக்கணமாம் என்பது உரையாசிரியர்க்குக் கருத்தென்றல் எவ்வாறு பொருந்தும்? உருபு விரிந்துநின்றாலென் ? தொக்குநின்றாலென் ? பெயரும் பெயரும் கூடிய விடத்து ஒருங்கிசைக்கும், பெயரும் வினையும் கூடிய விடத்து ஒருங்கிசையா என்பதே உரையாசிரியர் கருத்தாம். அதனைப் "பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப" என மேற்குறித்த சூத்திரத்துக்கு அவருரைத்த உரையா னுணர்ந்துகொள்க. ஆதலின், அது தொகையிலக்கணநோக்கிக் கூறியதன்றாம். தொகையினிலக்கணம் உருபு

தொகுதல் என்பதே அவர் கருத்தாம். அது, 'வண்ணத்தின் வடிவின்' என்னும் பண்புத்தொகைச் சூத்திரவுரையுள் (எச்—உ0) "மற்று வேற்றுமைத்தொகையும் உவமத்தொகையும் வேற்றுமையுருபும், உவமஉருபும் தொக்கமையால் தொகையென்றல் அமையும். ஒழிந்த வினைத்தொகையும் அவ்வாறு தொக்குநின்றிலவாலெனின், அவ்வாறு தொகுதலேயன்று தொகையாவது; 'கொல்யானை' என்புழி, 'கொல்லும்' என்னும் வினைச்சொல் ஒருகூறுநிற்ப ஒருகூறு தொக்கமையின் வினைத்தொகையாயிற்று. 'கருங்குதிரை' என்புழி 'கரியது' என்னும் பண்புப்பெயர் ஒருகூறுநிற்ப ஒருகூறு தொக்கமையின் பண்புத்தொகையாயிற்று எனக் கூறுதலால் அறியப்படும். ஆதலின், 'வேற்றுமையுருபும் உவமவுருபும் உம்மையும் வினைச்சொல்லினும் பண்புச்சொல்லினும் தொகுதலிற் றொகையாயின எனக் கூறுவாரும்' எனச் சேனாவரையர் குறித்தவருள் உரையாசிரியரும் ஒருவரேயாவர். ஆதலின், குறிப்பாசிரியர் குறித்தவாறு சேனாவரையருடைய முதற்காரணமும் மூன்றாங் காரணமும் நில்லா என்பதூஉம் பொருத்தமில் கூற்றேயாம்.

இனிக் குறிப்பாசிரியர் குறித்தவாறு, 'கேழற்பன்றி' என்பதில் 'ஆகிய' என்னும் பண்புவாசகம் தொக்குநின்றதேல், 'கருங்குதிரை' என்புழியும் 'கரியதாகிய குதிரை' என விரிக்கப்படுதலின் ஆண்டும் ஆகிய என்னும் வாசகம் தொக்குநின்றதெனக் கோடல்வேண்டும். ஆதலின் சேனாவரையர் கூறியவாறு, தொகைப்பொருளுணர்த்துதற்குக் கொணர்ந்து விரிக்கப்பட்ட பிற சொல்லே அதுவாம் எனக் கொள்வதன்றி, உருபென்றல் பொருத்தமன்றாம். இதுபோல்வன உருபாமேல், 'சாத்தன் வந்தான்' என்னும் எழுவாய்த்தொடரை உணர்த்தற்கு விரிக்கும் 'ஆனவன்' முதலியனவும் உருபாவான் சென்று 'தொடரும்' தொகையாவன் சேறும். ஆதலின் இதுபோல்வனவெல்லாம் மாணாக்கர்க்குப் பொருளுணர்த்தற்கு விரித்துக்காட்டும் வாசகங்களேயாதல் உய்த்துணர்க. ஆதலில் ஆண்டும் சேனாவரையர்கருத்தேபொருந்தல் காண்க.

இனித் தெய்வச்சிலையார் 'குன்றத்தின்கணிருந்தான்' என்பது, உருபுதொக்கு, 'குன்றத்திருந்தான்' என நின்றுழியும், 'இருந்தான்' என்பது பெயரையுணர்த்திக் 'குன்றத்திருந்தவன்' என நின்றவழியே ஒருசொன்னீர்மையதாம் எனக் கூறலின், "பெயரினாகிய தொகையுமாருளவே" என்பத னுரைக்கண், சேனாவரையர், 'வினையினாகிய தொகையுமுள'என உம்மையாற்கொண்ட 'குன்றத்திருந்தான்' என்பது போல்வன

ஒருசொல்லாதல் எங்ஙனமமையும்? எனக் குறிப்பாசிரியர் ஒரு ஆக்ஷேபம் நிகழ்த்துகின்றார். 'குன்றத்தின்கணிருந்தான்' என்பதும், 'குன்றத்தின்கணிருந்தவன்' என வருமொழி பெயரையுணர்த்துங்கால், உருபு விரிந்துநின்றவழியும் ஒருசொல்லாமாதலின் அவர் கூறுவது எங்ஙனம் பொருந்தும் என்பதைக் குறிப்பாசிரியர் நோக்குவாராயின் அங்ஙனம் நிகழ்த்தியிருக்கமாட்டார். நோக்காமையே யதற்குக் காரணமாதலின் சேனாவரையர்கருத்து ஆண்டும் மாறுபடுதலில்லையென்க. அங்ஙனமன்று; பெயரும் பெயருமே ஒட்டிநிற்கும். பெயரும் வினையும் ஒட்டி நில்லா என்பதே அவர் கருத்தாமெனின், 'நிலங்கடந்தவன்' என்புழி இருபெயரும் ஒட்டி எவ்வாறு 'வந்தான்' என்னும் பயனிலைக்கு எழுவாயாய் நிற்குமோ, அவ்வாறே 'நிலங்கடந்தான்' என்பதும் ஒட்டி ஒருசொல்லாய் முற்றாய்நின்று 'சாத்தன்' என்னும் பயனிலையைத் தான்கொண்டாதல், சாத்தன் என்னும் எழுவாய்க்குத் தான் பயனிலையாயாதல் நிற்குமாதலின், 'நிலங்கடந்தவன்' என்பதுபோல 'நிலங்கடந்தான்' என்பதும் ஒட்டி ஒருசொல்லாய்நிற்றற் கிழுக்கில்லையாமா றறியப்படுதலின், ஆண்டுந் தெய்வச்சிலையார்கருத்துப் பொருந்துமாறில்லையென வறிக. இவற்றி னியல்பெல்லாம் யாம் எழுதிச் செந்தமிழில் வெளிப்படுத்திய 'தொகைநிலை' என்னும் பொருளுரையுள் விளக்கியுள்ளாம். ஆண்டுக் காண்க. 'குன்றத்தின்கணிருந்தவன்' என்பது போல்வன உருபு விரிந்துநின்று இருமொழியும் பிளவுபட்டிசைத்தலின் ஒருசொன்னீர்மையனவன்றாம். பொருளுணர்த்துங்கால் ஒருசொல்லாய்நின்று பொருடந்து, பயனிலைகோடலின் ஒருசொல்லேயாம். 'குன்றத்திருந்தான்' என்பது வடமொழியிற்போலன்றி உருபுதொக்கு இருசொல்லும் ஒட்டிநின்று பயனிலைகோடலும், பயனிலையாதலும் எய்திநிற்றலின் ஒருசொல்லேயாம். இது தமிழ்வழக்கு. தமிழ்வழக்கிது வடமொழிவழக்கிது என இரண்டன்பேதமும் நன்குணர்ந்தே சேனாவரையர் 'தொகை' என்பதற்குப் பொருள்கூறினர். ஆதலின் வடமொழிவழக்கைமாத்திரம் மேற்கொண்டு தமிழ்வழக்கழியப் பொருள் கூறுவார்கூற்றுக்கள் யாவும் பொருத்தமில்கூற்றேயா மென்க. அவையெல்லாம் மாணாக்கரை விபரீதப்படுத்துவனவேயாம். ஆதலின், சேனாவரையர்கருத்துக்களை எடுத்து மறுக்கும்போது நுணுகி நோக்கி, இருமொழிவழக்கோடும் பொருந்த ஆராய்ந்து, இனி இவர்கருத்துப் பொருத்தமாதற் கிடமில்லையென்று கண்டபின்பே மறுப்பது நன்றாம். அங்ஙனமின்றி மறுப்பதெல்லாம் உண்மையாகா.

இனி, 'வேற்றுமையுருபிருந்தே வேற்றுமைப்பொருள் வரவேண்டுதலால் உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் கூறியமுறையே வேற்றுமையுருபு தொக்க தொகையென்றே பொருள்கொள்வது மேலானது' என்று குறிப்பாசிரியர் உரைத்தார். சேனாவரையருக்கும் தொகையில் உருபில்லையென்பது கருத்தன்று. வெளிப்படாது நிற்கும் என்பதே அவர்கருத்தாம். அதனை, எச்சவியல் கஙம் சூத்திரத்து விசேடவுரைநோக்கி யுணர்க. ஆயினும் நின்றுகெடுதல் என்பது அவர்க்குக் கருத்தன்று. நின்றுகெடா தென்பதற்கு அவர் காட்டுவது:—

"அதுவென் வேற்றுமை யுயர்திணைத் தொகைவயின்
அதுவெ னுருபுகெடக் குகரம் வருமே."

என்பதற்கு, நம்பியதுமகன் என்பதில் அது நின்று கெடக் குகரம் வந்து 'நம்பிக்குமகன்' என்றுயிற்று என்பது கருத்தாகக்கொள்ளின், அதுவுருபு நின்றதுணையும் திணைவழுவாம். ஆதலின் 'கெடல்' என்பதற்கு 'வாராமலிருத்தல்' என்பதே பொருளாம். ஆதலின் ஆசிரியர்க்கு நின்று கெடுதல் என்பது கருத்தன்று. வழுவன்றெனின் அதுவே நிற்றலமையும் என்பதே.

சேனாவரையர் கூறியவாறு 'கெடுதல்' என்பதற்கு ஈண்டு வாராமலிருத்தல் என்பது பொருளாதல், "வேற்றுமைக் குக்கெட அகரம் வருமே" என்னும் (புள்ளி—சு) சூத்திரத்தானும் அறியப்படும். எங்ஙனமெனில் நகாவீறு அல்வழியில் உகரம்பெறுமென விதித்த ஆசிரியர், வேற்றுமையில் உகரம்பெறாது அகரம்பெறுமென எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தலின், உக்கெட என்பதற்கு உகரம் வாராதொழிய என்பதே பொருளாமாதலின். 'பொருந்' என்பது, அல்வழியில் உகரம்பெற்றுப் பிறிதீறாகநின்று 'பொருநுக்கடிது'என மிக்குப்புணரும். வேற்றுமைக்கண் உகரம் பெறாது அகரம் பெற்றுப் பிறிதீறாக நின்று 'பொருநக் கடுமை' என மிக்குப்புணரும் என்பதே ஆசிரியர் கருத்தாம். 'நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை' என நன்னூலாரும் அங்ஙனமே கூறுதல் காண்க. அங்ஙனேல் "வெரிநெனிறுதி முழுதுங் கெடுவழி" என ஆசிரியர்கூறுதலின் ஆண்டு இரண்டும் கெடுமெனக்கூறலின் அகரமும் நின்று கெடுமென்பதே கருத்தாமெனின், அறியாதுகூறினாய்! ஆசிரியர் அகரவீறாக எடுத்துக் கொள்ளாது மீளவும் திரிந்ததன்றிரிபதுவாக 'வெரிநெனிறுதி' என்றே எடுத்துக்கோடலின், கெடுவழி என்பதற்குப் பொருள்,

'வேறுவினையுடனிகழ்ச்சியிற்போல' அகரம் வாராதொழியும், நகரம் கெடுமென்பதேயாம் ஆதலின் நின்றுகெடுமெனல் ஆசிரியர்க்கு எங்ஙனம் கருத்தாம். சுருங்கச்சொல்லல்பற்றி இரண்டனையுஞ் சேர்த்துக் 'கெடுவழி' என்றார் எனினும், 'வரிநெனிறுதி' என்றதனால் அகரம் ஈறன்றென வுணர்த்தினர்; அது வாராதொழியும் என்பது போதா. இது வலிந்துகோடலன்று; உண்மைக் கருத்தாம். அகரம் நின்று கெடுமென்பதே ஆசிரியர்க்குக் கருத்தாயின்,

"வேற்றுமை யாயி னேனை யிரண்டும்
தோற்றம் வேண்டு மக்கென் சாரியை" (புள்ளி—௩௪) என்புழியும்,
"வேற்றுமை யாயி னேனை யெகினொடு
தோற்ற மொக்குங் கன்னென் கிளவி" (புள்ளி—௫௧)

என்புழியும் உகரக்கேடு கூறி அகரப்பேறு விதிப்பர்மன்; அங்ஙனம் விதியாமையானும் அவர்க் கது கருத்தன்றென்பதே துணிபாம். ஆதலால் இது வலிந்துகோடலன்மையும் உணர்க. பிறாண்டும் ஆசிரியர் இவ்வாறே கூறுதல் காண்க. இதனை ஆராய்ந்து உணர்ந்தே சேனாவரையர் 'கெட' என்பதற்கு 'வாராதொழிய' எனப் பொருள்கூறினார் என உணர்க. இங்ஙனம் ஆசிரியர் கருத்துணர்ந்துரைத்தல் யாண்டும் இவர்க் கியல்பெனக். முக்குணவசத்தான் முறைபிறழ்ந் துரைப்பனவுஞ் சிலவுளவாயினும் பெரிதும் முறைபிறழ்தல் இவர்க் கியல்பின் றெனக. முறைபிறழ்ந்தனவாகத் தோன்றுவனவும் நன்கா ராய்ந்தபின்பே அங்ஙன மாமெனக. முன்னும் ஆசிரியர் "இராவென் கிளவிக்ககரமில்லை" (உயிர் ௨௫) என்புழியும் அகரம் வருதலில்லை என்பதுபட 'இல்லை' என்றே கூறுதல் காண்க. இன்னும் ஆசிரியர்க்கு உருபு நின்றுகெடுதலில்லை என்பது கருத்தாதல், "தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்" என்பதே சான்றாம். தோற்றம்—வெளிப்படல்.

இனிக் குறிப்பாசிரியர், "அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்" என்னுஞ் சூத்திரத்துக்குச் சேனாவரையருரைத்த உரையை மறுப்பதற்கு "எருத்துடையான்" என்பது உயர்திணைத் தொகையா? அஃறிணைத்தொகையா? என ஒரு ஆக்ஷேபம் எழுப்புகின்றார். உயர்திணைத்தொகையென்பது, உயர்திணைப்பொருளோடு தொக்க தொகையென்றாயினும், உயர்திணைப்பொருள்படத் தொக்க தொகையென்றாயினும் பொருள்படும். பொருள் வருமொழிபற்றியதாகலின்; நிலைமொழி அஃறிணைச்சொல்லாயினும், உயர்திணைச்சொல்லோடு தொகுவன உயர்திணைப்பொருடருதலின் உயர்திணைத்தொகையேயாம்,

'அது' உருபேற்ற 'சாத்தனது' என்பது 'சாத்தனுடையது' என அஃறிணைப் பொருடருதலின் வருமொழியாகிய 'மகன்' என்னும் உயர்திணைச்சொல்லோடு தொகுதல் வழுவாமாகலின், நிலைமொழிபற்றி யன்று வருமொழிபற்றியே அது உருபு விலக்கப்பட்டதென்பது, யார்க் குந் தெற்றென உணரக்கிடத்தலின், நிலைமொழிபற்றியன்று; வருமொழி பற்றியே திணை ஈண்டுக்கொள்ளப்படுமென்பது. அதுபற்றியே ஆசிரியர் 'உயர்திணைத்தொகை'யெனப் பொதுவாகக் கூறினர் என்பது. நிலை மொழியும் உயர்திணையாயிருக்கவேண்டுமென்பது நியதியன்று. நியதி யாயின், 'ஆபுத்திரன்', 'ஆன்மகன்', 'புலிமகன்', 'மான்மகன்' என்பன போல்வனவாக அஃறிணையும் 'உயர்திணையும்' தொகுவனவற்றிற்கெல் லாம் விதியின்றாயே முடியும். இரண்டும் உயர்திணைச்சொல்லாயிருக்க வேண்டுமென உரையாசிரியராதல் சேனாவரையராதல் கூறிற்றிலர். ஆதலின் குறிப்பாசிரியர் எழுப்பிய இவ்வாக்ஷேபத்தால் யாதும் பய னின்றாம். இவ்வாக்ஷேபத்திற்குக் காரணம், ஆறும்வேற்றுமைப்பொருள் தமிழ்மொழிவழக்கில் எப்படிக்கொள்ளப்படுகின்றதென்பதை நன்கு ஆராயாமையே, ஆறும்வேற்றுமையுருபுகளின்பொருளைச் சிறப்பாக உணராமல், ஆறும்வேற்றுமையுருபு 'அது' உருபுதானே என்ற ஒரு பொது உணர்ச்சிபற்றி, 'சாத்தனதுமாடு' என்பதுபோலச் 'சாத்தனது மகன்' எனவும் பிற்காலத்து வழங்குவாராயினர். அது "கருமமல்லாச் சார்பென்கிளவிக்குரிய கண்ணுருபை இடைத்தெரிவின்றிக் கருமச் சார்ச்சிக்குங் கொடுத்து வழங்குவது"போல்வதோர் வழக்காறேயாம். "அரனதுதோழன்" என்பதுபோல்வதூஉம் பிற்காலத்துவழக்கேயாம். ஆறும்வேற்றுமையுருபுகள் பொருடருமாறெல்லாம் செந்தமிழில் வெளிப் படுத்திய "பிறிதுபிறிதேற்றல்" முதலிய விஷயங்களில் விளக்கியுள்ளாம்.

இன்னும், வருமொழிபற்றியே உயர்திணைத்தொகை என்பதும் அஃறிணைத்தொகையென்பதுங் கொள்ளப்படுமென்பது, "நம்பிக்கு மகன்" "நம்பியது மாடு" எனவரும் உதாரணங்களான் முறையே உணர்ந்துகொள்க. நம்பி உயர்திணையாயினும் உயர்திணைத்தொகை யெனப்படுமா? வருமொழிநோக்கி அஃறிணைத்தொகை என்றே கொள் ளப்படும். குறிப்பாசிரியர்க்கு இதன்கண் ஆக்ஷேபம் நிகழாமை என்னையோ? அறியேம். "நம்பிமகன்" முதலியனபோல "ஆபுத்திரன்" முதலியன பெருவழக்கன்மையின் உரையாசிரியர்முதலியோர் அவற்றை உதாரணமாகக் காட்டிற்றிலர் என்க. [தொடரும்]

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௪உ-ம் பக்கத்தொடர்ச்சி.]

421 பொன்னோக்கியர் தம்புலன் நோக்கிய புன்கணோரும்
இன்னோக்கியர் இல்வழி எய்திய நல்விருந்தும்
தன்னோக்கிய நெஞ்சுடை யோகியர் தம்மைச் சார்ந்த
மென்னோக்கியர் நோக்கமும் ஆமென மீண்ட தவ்வேல்.

இ - ள். விலைமாதர் (வீட்டுக்குச்சென்று அவர்) களுடைய (ஐம்) புல (நுகர்ச்சியாகிய கலவியின்ப) த்தை (அடையக் கருதிய தரித்திரர் (பொருள் கொடுக்கமாட்டாமையால் அம்மகளிரால் ஏற்றுக்கொள்ளப் படாமல் அவர் வீட்டினுள்ளே நுழையமாட்டாமல் திரும்புதல்) போலவும், (விருந்தினர் வரக்கண்டபோது உண்டாகிய மனமகிழ்ச்சியை வெளியுறச்செய்யும் முகமலர்ச்சியோடுகூடிய) இனிய பார்வையுடையார் (ஆகக் கணவன் மனைவியிருவரும்) இல்லாத வீட்டின்) இடத்தே உற்ற உத்தம விருந்தினர் (அவ்வீட்டினுள்ளே செல்லாமல் திரும்பிவிடுதல்) போலவும், தன் (ஆன்ம சொரூபத்தினை (அறியக்கருதி யோகாப்பியாசஞ்செய்து அந்தர் முகமாக) நோக்கிய மனத்தையுடைய யோகிகளை (மோகிகளாக்கும்படி) அடைந்த மாதர் (காமக்குறிப்பொடு பார்க்கும்) பார்வை (அவ்யோகியர் மனத்துள்ளே செல்லமாட்டாமல் திரும்புதல்) போலவும் (இராவணன் எறிந்த) அந்தச் சூலாயுதம் (சடாயுவின் மார்பினுட் புகமாட்டாமல்) திரும்பியது.

பொன் நோக்கியர்-(தம்பால் வரும் ஆடவர், அழகுடையாரோ அவ்வலட்சணமுடையாரோ, இளைஞரோ கிழவரோ என்று நோக்காராய் அவர் தரும்) பொன்னையே (பொருளையே) நோக்குதலுடையார் (ஆன விலைமாதர்). நோக்குதல் - கருதுதல். "காமமாவது ஒருகாலத்து ஒரு பொருளாசல் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தான இன்பமாதலால், அதனைக் கருதுதல் 'புலனோக்குதல்' எனப்பட்டது." புன்கண்-வறுமை (புறநானூறு) "பொருளின்மை துன்பத்துள் துன்பமாதலால், வறியவர் 'புன்கணோர்' எனப் ... ார்." இன் நோக்கியர் - இனியபார்வை

யுடையார். இல் - இல்லாத. வழி - இடம். நல் விருந்து - (“மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து - நோக்கக் குழையும் விருந்து” என்றபடியுள்ள) உத்தம விருந்தினர். நன்மை - உத்தமம் (பிங்கலம் களஅசு). தன் நோக்கிய - தன்னை நோக்கிய. மெல் நோக்கியர் - மெல்லிய பார்வையுடையார். வடமொழிவாணர் ‘மிருதுபாஷி’க ளென்னும் ‘மென்மொழியார்’ போல, ‘மென்னோக்கியர்’ மாதரென்னும் பொருளுடையது. நோக்கியர், நோக்கு என்ற பகுதியும் இ என்ற இருதிணை முக்கூற்றொருமைவிகுதியும் அர் என்ற பலர்பால்விகுதியும் சேர்ந்து வந்தது. ஆம் - போலும்.

‘இன்னோக்கிய வில்வழி யெய்திய நல்விருந்தும்’ என்பதற்கு “இல்லாள் முகத்தைப்பார்த்து அவள் கருத்துப்படி நடப்பவாது மனைக்கண் சென்ற நல்விருந்தினரையும்” என்பதும் “இனிய பார்வையுடைய [நற்குண நற்செய்கையுள்ள] மகளிர் இல்லாதவிடத்திற் சென்றடைந்த நல்ல விருந்தினரையும்” என்பதும் முந்திய உரைகள்.

“தன்னையறிந்தவன் தலைவனையறிவான்” என்னும் தத்துவஞான சம்பந்தமான பழமொழிப்படி கடவுளையறிதற்கு வாயிலாகத் தன்னையறிய முயலுதல் இப்பாட்டின் மூன்றும் அடியிற் குறிக்கப்பட்டது. சடாயுவின்மார்பிலெறியப்பட்ட சூலம் உள்ளே செல்லமாட்டாமல் (சுவர்மீதெறிந்த பந்துபோலத்) திரும்பியதென்பதற்குவமானமாகக் கம்பர் மூன்று உலக உண்மைநிகழ்ச்சிகளை இனிதெடுத்துக் கூறியிருத்தல் கவனிக்கத்தக்கது.

‘தன் (னை) நொக்கிய நெஞ்சுடையோகியர்’ என்பதில் ‘தன்’ நெஞ்சைக் குறித்ததாகக்கொண்டால் ஒருமை பன்மை மயங்காத வழாநிலையாம்; யோகியரைச் சுட்டுவதாகக்கொண்டால் அம்மயக்கமுடைய வழுநிலையாம்: அதனை ஒவ்வொருயோகியும் தன்னைத் தன்னைத் தனித்தனி நோக்கிய யோகியரெனப் பொருள்செய்து வழுவமைதியாகக் கொள்ளவேண்டும்.

‘புன்கண்’ என்பது புறநானூற்று சசுஎம் பாட்டில் ‘புலன்உழுதுண்மார் புன்கண்’ என்ற இடத்தும் இப் பாட்டினிடத்துமன்றி வேறெங்கும் வறுமை யென்றபொருளில் வருவதைக் கண்டதாக ஞாபகமில்லை அச்சொல் அப்பொருள்பட வருவது அருமையாயிருந்

தும் மேற்கோள் காட்டாமல் முந்திய உரைகாரர் புன்கணோர் வறிஞரென உரை செய்திருக்கின்றனர்: அதனால், 'புன்கணோர்' என்பது, அது நிற்கும் இடத்தின் ஆற்றலால் வறிஞரென்றே பொருள்கூறக் கடவதாயிருப்பதுபற்றியே அச்சொற்கு அப்பொருள்கூறினார்போலும்.

'புன்கணோரும்' என்ற சொல்லை எடுத்துவிட்டு, அது நிற்குமிடத்தில், முன்வந்த 'பொன்'னையே மீட்டும் எடுத்தாண்டு கூறியதுகூறலாய்ச் சிறவாத 'பொன்னிலோரும்' என்பதைத் தவிர்த்து வேறெச்சொல்லைக்கொண்டு நிரப்பினும் பொருள்சிதைந்துவிடும்; அல்லது மோனை சிதைந்துவிடுமென்பதொருதலை. அவ்வாறாக, அந்தப் 'புன்கணோரும்' என்ற அருப்பொருட்சொல்லைப் பொருட்பொலிவும் மோனைப்பொலிவும் ஒருங்குபொருந்த அமைத்த பாண்டித்தியம் விளங்கும் கவித்திறம் கவிஞராயுள்ளார்கருத்தை ஈர்த்துக் கவர்ந்து இன்புறுத்தும் இயல்பினது.

[இராவணனை வேறு படை யெடுக்கவிடாமல், சடாயு, சாரதி தலையைப் பறித்து, முகத்திலெறிந்து வருந்தச்செய்தான். அதனால் அவன் கோபங்கொண்டு தண்டாயுதத்தால் தாக்கச் சடாயு, தரைமேற் சாய்ந்தான். சாயவே, சாரதியில்லாத் தேரைத் தசமுகன் தானே செலுத்துவானைப் விரைவாக விட்டான். சீதை துடித்துவிழுந்தாள். அதுகண்டு, சடாயு, தன் வருத்தத்தைப் பொருட்படுத்தாமல், 'பயப்படாதே' என்று பகர்ந்துகொண்டு பறந்துவந்து "எங்கடா இனிப் போவது!" என்று தன்னை முன் தாக்கிய தண்டாயுதத்தை இனித் தாக்காதபடி பற்றிப் பறித்தெறிந்து, இராவணன் ஏறுவதற்கு இடையூறாகக் குதிரைகளைக் கொன்றதோடுநின்றுவிடாமல் தேரையுஞ் சிதைத்து அம்மட்டில் அமையாமல் அவன் தலைமேற்பாய்ந்து தலைகளிலும் மார்பிலும் தோள்களிலும் சிறகாலடித்து அலகாற் கடித்தான். இராவணன், மூர்ச்சை ஓய்ந்து முடிசாய்ந்து இருந்தான். மெலிந்துவிட்டவனை மேற்கொண்டு தாக்குதல் வீரமன்றென்று, சடாயு, தாக்குதலைத் தவிர்த்து "இராவணா! இவ்வளவுதானா உன் வலி!" என்றான். அவன், வெகுண்டு, கைவிடுபடைகளாயிருந்த அம்பும் சூலமும் அவமானதன்றிக் கைவிடாப் படையாயிருந்த தண்டும் ஒடிந்ததையும் வேறு கைவிடுபடையோ கைவிடாப்படையோ எதுவும் இல்லாமையையும் எண்ணி, இதனால் இவனைத் தப்பாது கொல்வேனென்று, உமாபதியிடம் பெற்று உற்றுழி

உதவ உயிர்க்குயிராக வைத்திருந்த ஒள்வாளை உறையினின்றும் உருவி ஓங்கி ஓச்சினன். அத் தெய்வவாள் ஆர்மீது பிரயோகிக்கப்பட்டாலும் அவர் ஆவியையுண்ணும லவமாகாதாகையாலும் ஆயுளிறுதிக்காலம் அடுத்ததாலும், சடாயு, சிறகறுப்புண்டு, மலைகள் சிறகுகளுடையவைகளா யிருந்தகாலத்தில் இந்திரன் எறிந்த வச்சிராயுதத்தால் இறகற்ற ஒரு மலைபோல விழுந்தான்.

சடாயு சாகும்நிலையடைந்ததைக் கண்ட சானகியின் தயக்கம்.

தனக்கு ஆதாரமாயிருந்த கொழுகொம்பு முறிந்துவிழத் தானும் விழும் கொடிபோலச் சடாயு சாய்ந்துவிழக்கண்ட சானகி தயங்கித் தரையில்விழுந்து புரண்டாள். "எனக்கு அபயம் அளித்துக் காக்க வந்த அந்தத் தூயோன் தோற்பதே! இந்தத் தீயோன் செயிப்பதே! நன்று! நன்று! 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்ற ஆப்த வாக்கியமும் பொய்த்ததே!" என்று வருந்தினள்.

இராவணன் சீதையைத் தரையோடு
தோள்மேற் சுமந்துகொண்டுபோதல்.

இராவணன், இனித் தடுப்பாரில்லையென்று, சானகியை அவள் இருந்த தரையோடும் தூக்கியெடுத்துத் தோள்மேல் வைத்து விண் வழியே விரைவாகச் சென்றான். அவன் போகும் வேகத்தால் உண் டாகிய அதிர்ச்சியால் உடல்வருந்த முன்னமே துன்பத்துக்கு மேல் துன்பமுற்று உள்ளம் சோர்ந்திருந்தவள் இப்போது 'உடலும் சோர்ந்து உணர்வுநீங்கிக் கிடந்தாள்.*

இராவணன் சென்றதுகண்டு சடாயு தன்னுள்ளே கூறிக்கோள்ளல்.

சடாயு, இராவணன் சென்றதுகண்டு 'இராமலக்குமணர் வந்தா ரில்லை. அவர்களை இவன் வெல்ல வல்லவ னல்லன்; வஞ்சித்தே இந்த

*சிதையின் துன்பமிகுதியை இச்சமயத்தில் இதற்கதிகமாக வருணித் தால், வாசகர்மனம் தாங்கமாட்டால் சலித்துவிடுமென்று, கம்பர், இங்கே, அவள், துன்ப உணர்வு தொலையும்படி அறிவுமயங்குதற் கேற்ற எது எடுத்துக் கூறி, ஒருவர் இறந்துவிடாமல் எவ்வளவு துன்பமடையக்கூடுமோ, அவ்வளவு துன்பமடைந்தபோது அயர்ந்து அறிவுமயங்குதல் இயற்கைநிகழ்ச்சியாயிருக் கும் உண்மை புலப்பட, அவள் அறிவு மயங்கி வீழ்ந்தாளென்ற உயரிய கவித்துவம் ஊன்றி நோக்குதற்குரியது.

இழிந்த தீத்தொழில் செய்திருக்கிறான் : திசைமுகன்சாபத்தால் அவளைத் தீண்டமாட்டான். என் வற்புச்சிறை*போல அவள் கற்புச் சிறை† சிதைவதன்று.' என்று கவலைநீக்கினான். சீதையை மீட்டே னில்லையே என்ற மானமும் இராமலக்குமணரைக் காணும் ஆசையும் நெஞ்சுள் நிலைத்துநிற்க, உணர்வு நீங்கானாய், இறகுகளினின்று இரத்தம் வடிவதால் சோர்ந்து தூங்குவான்போன்று கிடந்தான்.

இராவணன் இலங்கைக்குக்கொண்டுபோய்ச் சீதையைச் சிறைவைத்தல்.

விண்வழிச் சென்ற இராவணன், இலங்கையை அடைந்து, அங்கே, அசோகவனத்திலே, அரக்கியர் சூழ்ந்து காவல்செய்யச் சீதையைச் சிறைவைத்தான்.

இலக்குமணன் இராமனைக் காணுதல்.

சீதையைவிட்டுப்போன இலக்குமணன் இராமனைத் தேடிச்சென்று கண்டான். அவன் இராமன் தீங்கெய்திலனெனக் கருத்துக்காட்சியாற் கண்டது, கண்காட்சியால் உறுதியுற்றது. மாதருக்குரிய பேதைமை யால் மைதிலி மாரீசனது மாயக்குரல்கேட்டு மயங்குவாளே யென்று வருந்தி அவள் வசிக்குமிடத்துக்குவந்துகொண்டிருந்த இராமன் இலக்கு மணனைக் கண்டான்].

இராமன் இலக்குமணன் வந்த காரணத்தை அநுமானித் தறிதல்.

422 புன்சொற் கடந்த பகுவாய் அரக்கன் உரைபொய் யெனாது புகல்வான்
வன்சொற் கடந்து மடமங்கை ஏவ, நிலைதோ வந்த மருளே,
தன்சொற் கடந்து தளர்கின்ற நெஞ்சம் உடையேன் மருங்கு தனியே
என்சொற் கடந்து மனமும் தளர்ந்த இளவீரன் வந்த இயல்பே.

இ - ள். (சீதையைப் பாதுகாத்திருப்பாயாக என்ற) என்வார்த் தையை (மீறும்படி வற்புறுத்தப்பட்டு மனம் ஒருப்படாமல்) மீறி (அதனால்) மனம் தளர்ந்திருக்கிற இலக்குமணன், ('இது மாயமான், இதன்பின் ஏகற்க' என்று எச்சரித்துச் சொல்லிய) தன் சொல்லைத்

* வலிமையுடைய சிறகு.

† கற்பாகிய காவல்.

தட்டியதனுல் (நேர்ந்த தீங்கை நினைந்து வருந்தித் தளர்கின்ற மனத்தினேன் மருங்கே தனியாக வந்த (தற்கு) இயல்பு (ஆன காரணம், நான் அபாயத்துக்குள்ளாகி உதவிவேண்டி அலறினாற்போல என் தகுதிக்கு) ஈனமான வார்த்தைகளை வழங்கிய இராக்கதன்சொற்களைச் சீதை பொய்யென்றெண்ணாமல் (மெய்யென்று நம்பி இலக்குமணனை நோக்கிக்) கூறுபவள், (அவன் தானாக என் உதவிக்கு வராமைபற்றிக் கோபித்து,) வன்சொல்வழங்கி (என்னிடம் வரும்படி) ஏவியதனுல், (தான் தெளிவாகத் தெரிந்திருந்த) என்நிலைமையைத் (தன்பொருட்டன்றி அவள் பொருட்டுத்) தெரியவந்த மயக்கமே (என்று இராமன் அநுமானித்தறிந்தான்).

புன்மை - குற்றம்; சிறுமை (இலக்கியச் சொல்லகராதி). புன்சொல் - அற்பமானவார்த்தை; குற்றமானவார்த்தை. பகுவாய் - பிளவுபட்ட வாய். இராக்கதர்வாயைப் பிலவாய் என்பதும், முழை (-குகை வாய் என்பதும் வழக்கம். இராமன் 'பகுவாய் அரக்கன்' என்றது மாரீசன் இறக்கும்போது வாய்திறந்து அலறியதை நினைந்துபோலும். 'மடமங்கை' என்பதில் மடம் என்பதற்குப் பேதைமை இளமை என்ற இருபொருள்களும் பொருந்துமாயினும், இராமன் தனக்கு அபாயம் நேராமையை இலக்குமணன் தெரிந்துகொண்டதுபோலச் சீதை தெரியாமையால் அவளை 'மடமங்கை' என்றானென்க.

'மனமூழ்ந்தளர்ந்த' என்பதற்கு "(உடம்பொடு) மனமூழ்ந்தளர்ந்த" என்று முந்திய உரைகளில் பொருள்கூறப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இலக்குமணனுடைய உடற்றளர்ச்சிக்குத் தக்க காரணம் யாதுங் கூறப்படவில்லையாதலாலும், இருந்தால் அது மனத்தளர்ச்சியேயாதலாலும் 'மனமும்' என்பதில் உம்மை ஒருபொருளுங் குறியாது இசைநிறைக்கவந்ததென்க. இவ்வாறு உம்மை கம்பராமாயணத்தில் பலஇடங்களில் வருவதைக் காணலாம்.

இராமன், இலக்குமணன் சீதையைத் தனிக்கவிட்டுவந்ததற்குக் காரணம் சீதைமயக்கமே யென்று ஊகித்துணர்ந்தது இப்பாட்டிற் கூறப்பட்டிருக்கின்றதாதலால், 'மருள்' இலக்குமணனது இயல்புகாரணமாக ஏற்படாமல் சீதை பேதைமையால் ஏவியதுகாரணமாக ஏற்பட்டதென்பது போதரும்.

என்னால் இராக்கதன் இறந்தானென இலக்குமணன் தெளிவாகத் தெரிந்ததுபோலச் சீதையும் தெரிந்திருந்தால், இறந்தவன் எத்தகையனென அறியவும் அவனைக் கொன்றதற்காக என்னோடு சந்தோடங்கொண்டாடவும் இருவரும் வந்திருப்பார்கள், இலக்குமணன்மட்டுந் தனியே வந்திரான், யான் எதிரியால் அபாயநிலையுற்றிருந்ததாகத் தவறாகச் சீதையெண்ணி இலக்குமணனை எனக்கு உதவிசெய்யும்படி ஏவியதனால் அவன் தனியே வந்திருக்கிறானென்று இராமன் கருதினானாதலால், 'இளவீரன் வந்த இயல்பே' என்றுமட்டுங் கூறாது 'தனியே இளவீரன் வந்த இயல்பே' என்றானென்க.

இராமன், இலக்குமணனால், நிகழ்ந்ததை யறிந்து சீதையைக்காணச் செல்லுதல்.

[விதி என்ன கேடு விளைக்கவிருக்கிறதோ என்று விசனித்துக் கொண்டிருந்த இராமன், தன் காலில் வீழ்ந்து இலக்குமணன் வணங்க, அவனை வாரியெடுத்து மார்போடணைத்து "எதற்காக வந்தாய்?" என, அவன் நிகழ்ந்ததைக் கூறச் "சீதையைக் கவரக்கூடியவர்கள் நாம் அவளைவிட்டு நீங்கச்செய்த சூழ்ச்சி இது" என்று சொல்லி, "உன் செய்கை அவள் சாவாது தடுக்கச்செய்ததாதலாற் குற்றமற்றது, அவள் மனக்கலக்கத்தாற் செய்ததால் அவள் செய்கையும் குற்றமானதன்று, உங்கள் இருவர் செய்கைகளுக்குங் காரணமாய், நீ தடுத்துங் கேளாது மாயமானின்பின் சென்ற என் செய்கையே குற்றமுடையது, இனித் தாமதித்தல் தகாது, அவளைக் கண்டாலன்றித் துன்பம் தொலையாது, காணச்செல்வோம்" என்று விரைந்தோடிப்போய்ப் பார்த்துச் சீதையைக் காணாமையால், தேகத்தைவிட்டு வெளியேபோயிருந்த சீவன் திரும்பி வந்து தேகத்தைக் காணாமல் திகைத்ததுபோலத் திகைத்துநின்றான்]

இராமன் சீதையைக் காணாது திகைத்தல்.

423 கைத்த சிந்தையன், கனங்குழை யணங்கினைக் காணா
துய்த்து வாழ்தா வேறொரு பொருளிலான் உதவ
வைத்த மாநிதி மண்ணொடு மறைத்தனர் வாரிப்
பொய்த்துளார்கொளத் திகைத்துநின் றானையும் போன்றான்.

இ ள். சீதையைக் காணாமல் (திகைத்து உயிர்வாழ்க்கையில் வெறுப்படைந்து) மனங் கசந்தவனான இராமன்,—(தான் புதைக்கும்

பொருளன்றி) வேறு பொருள் ஒன்றும் இல்லாத (வறிஞனொரு)வன் (பின்பு, புதைத்த இடத்தினின்று தோண்டி யெடுத்துக்)கொண்டுபோய் (வைத்துக்கொண்டு) வாழ்வதற்கு உதவும்படி (பாக ஒரு மண் பாத்திரத்தி லிட்டுப் புதைத்து) வைத்த பெருந்திரவியத்தை வஞ்சக(க் கள்வ)ர் (அது வைக்கப்பட்டிருந்த) மண்பாத்திரத்தோடு (தோண்டி எடுத்துத்) திருடி மறைத்து (வைத்துக்கொள்ள, (அவ் வறிஞன் திரும்பிவந்து புதைய லிருந்த இடத்தைப்பார்த்து அது வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தோடு அதனைக் காணாமல்) திகைத்து நின்றவனையும் ஒத்தான்.

கைத்தல் - வெறுத்தல்; கசத்தல். கனம் குழை அணங்கு - (திரளான பொன்னாற் செய்யப்பட்டமையால்) கனமான குண்டலங்களை (க் காதணியாக)உடைய பெண் - சீதை. 'அணங்குகொல்' என்ற குறளில் 'கனங்குழை' வருதல் காண்க. உய்த்தல் - கொண்டுபோதல் (சீவக சிந்தாமணி 425). மண், ஆகுபெயராய் மண்ணாலாகிய பாத்திரத்தை உணர்த்திநின்றது. மறைத்தனர், முற்றெச்சமாய் மறைத்து என்ற பொருள்தந்துநின்றது. வாரி - திருடி. பொய்த்துளோர் - உண்மைக்கு மாறுபட்டோர் - வஞ்சகர் - கள்வர். 'மறைந்தன வாங்கி' என்பதும் பாடம்.

'கைத்த சிந்தையன்' என்பதை விகுதிபிரித்துக்கூட்டிச் சிந்தை கைத்தவன் எனக்கொண்டு 'கைத்தசிந்தையன் கனங்குழை அணங்கினைக் காணாது' என்பதைக் 'கனங்குழை அணங்கினைக் காணாது சிந்தை கைத்தவன்' என மாற்றியும், 'உய்த்து வாழ்தர வேறொரு பொருளிலான் உதவ வைத்த மாநிதி என்பதை 'வேறொரு பொருளிலான் உய்த்து வாழ்தர உதவவைத்த மாநிதி' என மாற்றியும், 'மண்ணொடு மறைத் தனர் வாரிப் பொய்த்துளார் கொள' என்பதைப் 'பொய்த்துளார் மண் ணொடு வாரி மறைத்தனர்கொள' என மாற்றியும் பொருள்கூறியிருத்தல் காண்க.

'உய்த்து வாழ்தர' என்பதற்கு "வைத்துக்கொண்டு வாழ்வதற்கு" என்பது முந்திய உரைகளிற் கண்டது. 'உதவ வைத்த மாநிதி மண் ணொடு மறைந்தன வாங்கிப் பொய்த்துளார்கொள' என்பதற்குத் "(தனக்கு) உதவுதற்காக (நிலத்தில்) புதைத்துவைத்த மிக்க செல்வங் களை வஞ்சனைச் செய்கையுடையோர் புதைத்துவைத்த மண்ணோடு

மறையும்படி எடுத்துக்கொள்ள" என்பதும் முந்திய உரையிற் காணப் பட்டது.

பழைய உரைகளில் 'மண்ணொடு' என்பது மண்ணோடு என்றே உரைகூறப்பட்டதேயன்றி மண்பாத்திரத்தோடு என்று பொருள் விளக்கப்படவில்லை. நிதியைப்புதைத்துவைப்பார் யாதாயினும் ஒரு பாத்திரத்துள் வைத்துப் புதைத்தல் வழக்கம். அப்பாத்திரம் செம்பு முதலிய உலோகங்கள் எதனாலாயினும் மண்ணாலாயினுஞ் செய்ததா யிருக்கலாம். புதையலெடுப்பார் புதையற்பொருளை அது வைக்கப்பட் டிருக்கும் பாத்திரத்தோடு எடுத்துப்போவாரேயன்றிப் புதையற் பாத்திரமிருந்த மண்ணையும் எடுத்துப்போகார். ஆதலால், 'மண்ணொடு' என்பதில் 'மண்' ஆகுபெயராய் மண்ணாலாகிய பாத்திரத்தை யுணர்த்துவ தாகக்கொண்டு 'மண்ணொடு' என்பதற்கு மண்பாத்திரத்தோடு என உரைகூறப்பட்டது.

சீதையை இராவணன் 'மண்ணொடும் வீங்குதோள் மேற்கொடு விண்ணி னேகினன்' (இப்படலம்-கஙஎ) என்றதனோடு பொருந்த இங்கே 'மாநிதி மண்ணொடு.........வாரி' என்றார். முந்திய 'மண்' பர்ணசாலையடியிலுள்ள மண்ணையும் பிந்திய 'மண்' ஆகுபெயராய் மண் பாத்திரத்தையும் உணர்த்துதல் தெளிவாம். உவமானத்தில் 'மாநிதி மண்ணொடு வாரி' என்றதனால், உவமேயத்தில் சீதை அவளிருந்த மண் ணோடு எடுத்துக்கொண்டுபோகப்பட்டதை உய்த்துணர்ந்துகொள்ள வைத்தார்.

'உயத்துவாழ்தா வேறொரு பொருளிலான்', "இந்த இப்பிற விக்கிரு மாதரைச்-சிந்தையாலும் தொடேன் என்ற" (சூளாமணிப் படலம்-ஙச) வனுக் கூடிவாழ வேறொருபெண்ணுமில்லாத இராம னுக்கும்; 'மாநிதி' சீதைக்கும்; 'வேறொருபொருளிலான் (பூமியில் மண் பாத்திரத்திலிட்டுப் புதைத்து) வைத்த மாநிதி' இராமன் வனத்திலே பர்ணசாலையிலேவைத்த சீதைக்கும்; 'பொய்த்துளார் மாநிதி(யை) மண்ணொடுவாரி மறைத்தனர் கொளல்', இராவணன் சீதையை அவ ளிருந்த தரையோடு எடுத்துக்கொண்டு காவாகவைத்தலுக்கும் உவமை; திகைத்துநிற்றல் உவமான உபமேயங்க ளிரண்டுக்கும் பொது.

இராமன் இராவணன்சென்ற தேர்த்தடம்பற்றிச் செல்லும்போது செத்தான்போற் கிடந்த சடாயுவைக் காணல்.

[இராமன் திகைக்கவே, பிரமாதிதேவரெல்லாம் திகைத்து, யாது செய்வானோ எது விளையுமோ என்று அஞ்சி நடுங்கினர். அப்போது, இலக்குமணன், இராமனை நோக்கிச் "சீதையைக் கவர்ந்தவர் தீண்டுதற் கஞ்சித் தரையொடு பேர்த்தெடுத்ததையும் தேர்த்தடத்தையும் பார்த்த னம். வலியில்லார்போல வாளா நில்லாமல், அவர்கள் நெடுந்தூரங் கடந் தேகுமுன் தொடர்ந்து போவோம்" என, இராமன் "ஆம், அதுவே இனிச் செய்தற்பாலது" என்று இலக்குமணனோடு தேர்சென்றவழியே தீவிரமாகச் சென்றான். அவ்வழியில் ஒரு வீணைக்கொடி ஒடிந்து கிடப்பதைக் கண்டார். அது ஆயுதத்தாலன்றித் துண்டத்தால்* துண்டமாயிருப்பதைக்கண்டு சடாயுசெயலென்று தெரிந்து அவன் அன்பை நினைந்து கண்ணீர் சோர, "இலக்குமணா! சீதையைக் கவர்ந்து சென்றவனை நம்பெரியதந்தை தடுத்துச் சமர்செய்திருக்கிறான். அந்தோ! அதி வயோதிகன்! அசகாயன்!"† என்று கவலைகூர, இலக்குமணன் "அவன் எவராலும் மெலிவிக்கமுடியாத வலிமிக்கவன். பகைவர்களை இன்றைப்பொழுது முழுதும் தடுப்பது திண்ணம். தனியாகவே சத்துருக்களைச் சயித்துச் சீதையை மீட்டாலும் மீட்பான். ஆயினும் நாம் சென்று அவனோடு சேர்ந்துகொள்வோம். ஆலோசனை செய்து கொண்டு ஆலசியஞ்செய்தலாகாது" என்றான்

விரைந்து தொடர்வதே மேலென்று மிகுவேகமாக இருவோரும் போகும்போது அந்தரத்தினின்று இந்திரவில் முறிந்து வீழ்ந்துகிடந் தாற்போன்ற ஒரு பாரமானவில் ஒடிந்துகிடக்கக் கண்டார்கள். இராமன் "இலக்குவ! இந்த வில்லின்வலிமை வியக்கத்தக்கது. இப்படிப்பட்ட வில்லை இறுத்தவன் பலத்தை என்னென்பேன்" என்றான். இருவரும் இறைப்பொழுது விம்மிதராய்நின்று மீண்டும் விரைந்து தொடர்ந்து செல்லும் வழியில் ஒரு நெடிய சூலாயுதத்தையும் இரண்டு பெரிய அம் பறாத்தூணிகளையுங் கண்டு மேற்செல்கையில் தேர்க்குதிரைகளும் சாரதி யும் செத்துக்கிடக்கக் கண்டார்கள். பின்பு பல சூரியர் பாரில் விழுந்து கிடந்தாற்போன்ற பல கிரீடங்களையும் தோளணிகளையும் பார்த்தார்கள்.

---

* துண்டம் - மூக்கு. † அசகாயன் - துணையில்லாதவன்.

அப்போது இராமன், "கிரீடங்கள் தோளணிகள் மிகப்பலவா யிருத்தலால், எதிர்த்தோர், தொகைமிகுந்தோராயிருத்தல்வேண்டும்" என, இலக்குமணன், "தலைகள்பல, தோள்கள்பலவென்றால் நம் தந்தையை இத்துணைத் தூரம் தொடர்ந்து போர்புரியச்செய்தவன் ஒருவனே, அவன் இராவணனாம்" என்றான். இளையோன் ஊகித்துரைத்ததை நன்குமதித்துக்கொண்டு விரைந்துசென்ற இராமன், தேன்சமுத்திரத்தில் வெள்ளிமலைகிடந்து விளங்கினாற்போல, இரத்த வெள்ளத்துள் சடாயு கிடக்கக் கண்டான். உடனே கண்கள் நீர்சொரிய, அவன்மீது, வெள்ளிமலைமேல் நீலமலை வீழ்ந்தாற்போல, வீழ்ந்தான். வீழ்ந்தவன், மூர்ச்சித்து, விழிமூடி, மூச்சின்றி நெடுநேரம் கிடந்தான். இலக்குமணன், சீதநீர் தெளிக்கத் தெளிந்து, வருந்திப் புலம்புவானானான்.]

424 தாதையரைத் தனயர் கொலைநேர்ந்தார்
யாந்தாரே உள்ளார்! முடிந்தானே முன்னொருவன்
எந்தாயோ! எற்காக நீயும் இறந்தனையால்!
அந்தோ! வினையேன் அருங்கூற்றம் ஆனேனே!

இ - ள். தமது தகப்பன்மாரைக் கொலைக்குக் கொடுத்தவராகிய புத்திரர் (எனக்குமுன்) யாருளர்! முன்பு (யான் பிரிந்தது காரணமாக) ஒரு தந்தை இறந்துபோனானே! என் தந்தையே! என் பொருட்டு நீயும் இறந்துபோனாயே! அந்தோ! பாவியேன் (உங்கள் இருவருக்கும்) இயமனானேனே!

தாதை - தகப்பன். தனயன் - புத்திரன். நேர்தல் - கொடுத்தல். 'கொலைநேர்தல்' என்பது, குவ்வுருபு தொக்குநிற்கப்பெற்றுக் கொலைக்குக் கொடுத்தல், என்றாவது, ஆக என்பது தொக்குக் கொலையாகக்கொடுத்தல் என்றாவது பொருள்படநின்றது. 'பலிநேர்தல்' 'பலிகொடுத்தல்' என்பவைபோலக் கொலைநேர்ந்தார் என்பதற்கு முந்திய உரைகாரர்கள் 'கொலைசெய்தார்' என்று பொருள்கொண்டனர். 'நேர்தல்' என்பது 'செய்தல்' என்னும் பொருளில் வரக்கண்டதில்லை. 'எந்தாய்' எந்தையென்பதன் விளி. எந்தை - என் தந்தை. 'எந்தாயோ' என்பதில் ஓகாரம் புலம்பலில் வந்த விளியுருபு. 'முடிந்தான் முன்னையொருவன்' 'இறந்தனையோ' என்பனவும் பாடங்கள்.

425 மாண்டேனே யன்றோ! மறையோர் குறைமுடிப்பான்
பூண்டேன் விரதம்; அதனால் உயிர்பொறப்பேன்

நீண்டேன் : மரம்போல நின்றொழிந்த புன்தொழிலேன்.
வேண்டேன்இம் மாமாயப் புன்பிறவி வேண்டேனே ! •

இ - ள். (இவ்வளவு இழிந்த நிலையை அடைந்த யான்) செத்(த பிரேதத்தை ஒத்)தேனேயன்றோ ! (அவமானத்தால் உயிர் தானே ஒழிந்திருத்தற்பாலேன். அது தானே யொழியவில்லையாயினும், அதனைத் தற்கொலைசெய்து போக்கி இறந்திருத்தற்பாலேன். ஏன் இறவாதிருக்கின்றேனென்றால்,) மறையவர்குறைமுடிக்கும்பொருட்டு (ஒரு) விரதத்தை மேற்கொண்டேன். அதனால், (வெறுக்கப்பட்டுச் சுமையாயிருக்கிற) உயிரைத் தாங்கினவனாய் (வாழ்நாள்) நீளலுற்றேன். (எனக்குத் தீங்குசெய்தார்க்கு எதிர்த்தீங்கு செய்யேனாய்த் தன்னை வெட்டுவாரையும் ஒன்றும் செய்யாத) மரம்போல நின்ற (வீரர் வெறுக்கும்) ஈனமான செய்கையுடையேன். (இத்தனைக்கும் இடமான) இந்த மாயப்பிறப்பை வெறுக்கின்றேன் ! (மிகவும்) வெறுக்கின்றேன்! (என்றான் இராமன்).

பொறுத்தல் – தாங்குதல் – சுமத்தல். 'நின்றொழிந்த' என்பதில் 'ஒழி', வெறுப்பைக்குறித்து நின்றது. ஒருவர் ஒருவனை அல்லது ஒருத்தியைக் கோபித்துப் 'போயொழி' என்பதில் உள்ள 'ஒழி' போன்றது. புன்மை - குற்றம் - சிறுமை (இலக்கியச்சொல்லகராதி). மாயம் - பொய் (பரிபாடல்); களவு (சிலப்பதிகாரம்); வஞ்சம் (புறப்பொருள் வெண்பாமாலை). பிறவி, மெய்யாய்ப் பிறவாநிலையான முத்திக்கு மறுதலையாதலால், மாயப்பிறவி என்பதற்கு (1) பொய்யான பிறப்பு என்றும், (2) பிறவாநிலையோடு பிறப்புநிலையை ஒப்பிட்டால், அது சாக்கிரநிலையோடு சொப்பனநிலையை ஒப்பிடுதல்போலாமாதலால், கனாப்போன்ற பிறப்பு என்றும், (3) பொய்யாய்க் கனவுபோன்றிருந்தும் மெய்யென்று நம்பும்படிசெய்தலால் வஞ்சப்பிறப்பு என்றும் பொருள்கூறலாம். வேண்டாமை - வெறுப்பு (குறள். ௪).

தூக்கமயக்கம் அபினிதின்ற மயக்கம்போன்ற மயக்கத்துக்குள்ளானானொருவன், தேட்கொட்டுத் துன்பம்போன்ற துன்பமுற்றபோது, திடீரென மயக்கந்தெளிந்து தன்னுணர்வுவரப்பெறுதல்போல, மாயன் 'மாயப்புன்பிறவி' மயக்கத்துக்குள்ளாகிச் சடுதியாகக் கொடுமையான துயருற்றபோது, பிறவிமயக்கம் நீங்கப்பெற்றுப் பூர்வநிலை ஞாபகத்துக்கு வர, 'ஏன் பிறப்பெடுத்தேன், பிறவாதிருந்தேனில்லையே, இப்போது தவறிப் பிறக்கலுற்றதுபோல இனி எப்போதும் பிறவிக்குட் படேன்' என்று கூறினாற்போல, அம் மாயன் அவதாரமான இராமன்,

தன்மனைவி கவரப்பட அவளை மீட்கமுயன்ற தன் பெரியதந்தை கொலையுண்ணு உண்டாகிய கொடுந்துயரடைந்தபோது, கருதினுணக் கவி பாவித்து, மற்றெல்லாரையும் மாயைக்குட்படுத்தும் மாமாயனான மகா விட்டுணுவே இராமனாக மனுடப்பிறப்பெடுத்தபோது பிறவித்துன்பந் தாங்கமாட்டாது வருந்தி 'வேண்டேன் இம் மாமாயப் புன்பிறவி வேண்டேனே' என்றுன்னென்றுகூறிப் பிறவி, பெருமயக்கத்தையும் மிகு வருத்தத்தையும் விளைவிக்கும் இயல்பினதென்பதை நன்குணர்த்தி யிருக்கும் நயம் பாராட்டத்தக்கது.

426 என்றாரம் பற்றுண்ண, ஏன்றுயைச் சான்றோயைக்
கொன்றானும் நின்றான ! கொலையுண்டு நீகிடந்தாய் !
வன்றாட் சிலை ஏந்தி, வாளிக் கடல் சுமந்து
நின்றேனும் நின்றேன் ; நெடுமரம்போல் நின்றேனே !

இ - ள். (காக்குங் கடமையுடைய நான் காக்கத் தவறியதனால்) என் மனைவி (ஒருவனால்) பிடிக்கப்பட, (அவளைப் பிடித்தவனிடமிருந்து மீட்க அவனை) எதிர்த் (துப் போர்செய்) த உன்னைக்கொன்றோன் (ஆன கொடியோன் கொல்லப்படாமல் உயிரோடு) இருக்கின்றான் ! (சாந்தசீல ஞன) நீ கொலையுண்டு கிடக்கின்றாய் ! (உன்னைக் கொன்றவனைக் கொல்லு தற்கு உபயோகப்படாத) வலியவில்லை ஏந்திக்கொண்டு தொகை மிகுத்த அம்புகளையுஞ் சுமந்துகொண்டு நிற்கின்ற நான் (தோற்றத்தில் வீரன் போல) நின்றேன் ! (உண்மையில்) நெடுமரம்போல (ஒருசெயலுமின்றி நின்றேன் !

தாரம் - மனைவி. ஏலல் - எதிர்த்தல். ஏன்றாயை - எதிர்த்தாயை - எதிர்த்தவனாகிய உன்னை. சான்றோர் - பெரியோர். சான்றோயை-பெருந் தகைமையுடைய உன்னை. வல்தாள் - "வலிய (கால்களென்னும்) அடிப் பக்கங்களாகிய (விற்குதையுள்ள) முனைகள்." சிலை - வில். வாளி - அம்பு. "கடல் என்றது, தொகுதியென்ற மாத்திரமாய்நின்றது. கீழ் கஎ௲-ம் கவியில் 'மழை' என்பது போல."

இப்பாட்டில், இராமன், தன் மனைவியைத் தான் பாதுகாக்கத்தவறினமைக்கு வெட்கத்தோடுகூடிய கழிவிரக்கமும், அவளை மீட்கப் போர்செய்து உற்றுழி உதவிய சடாயுவுக்கு நன்றியறிவோடுகூடிய அன்பும், அவன் கொலையுண்டமைக்குப் பரிதாபத்தோடுகூடிய துக்க

மும், அவனைக் கொலைசெய்தவனைத் தான் கொல்லாமைக்கு மானத்தோடு கூடிய கோபமும், இவைகட்கெல்லாம் பரிகாரமாகத் தான் ஒன்றுஞ்செய்யாது வாளா இருத்தற்குத் தன்னைத் தானே பரிகசித்து இழித்தலொடு கூடிய வெறுத்தலும் நன்குணருமாறு நயம்படக் கூறியுள்ள கவித்திறம் களியொடு கருதுதற்குரியது.

[“என்னைப்போல நிந்தனைக்காளானார் யாருள்ளார்! ஆயுதமில்லாத உன்னை ஆயுதமுடையான் கொன்றுபோய்விட, ஆயுதம்படைத்த யான் யாதுஞ்செய்யாது நிற்கின்றேன்! மகாவீரனேயன்றோ!” என்று இராமன் புலம்ப, இலக்குமணனும் இரங்கி அலறச் சடாயு, உணர்ச்சி சிறிது உண்டாக, அவர்கள் அழுகுரல்கேட்டு, மெல்லக் கண்திறந்து, இருவரையும்பார்த்து இதயங்குளிர, இழந்த இறகுகளையும் இன்னுயிரையும் எழிலோடு எய்தப்பெற்றான்போன்று இன்புற்று இயம்புகின்றான்.]

சடாயு இராமலக்குமணரை உச்சிமோத்தல்.

427 “பாக்கியத்தால் இன்றென் பயன்இல் பழியாக்கை
போக்குகின்றேன் கண்ணுற்றேன் புண்ணியரே வம்மின்” என்று
தாக்கி அரக்கன மகுடத் தலைதுமித்த
மூக்கினால் உச்சி முறைமுறையே மோக்கின்றான்.

இ-ள். “புண்ணியவான்களே! (சீதையை மீட்கும்) பயன் அடையாமற்போன (தனால்) பழிப்புடைய எனது உடலைப் போக்கு (வேனாய் உயிர்விடு)கின்ற யான் (முன்செய்த) நல்வினைப் பயனால் (அப்படி உயிர்விடும்) இப்பொழுது (உங்களைக்) காணப்பெற்றேன். (என் அருகே) வாருங்கள்” என்று (சொல்ல, அவர்கள் அருகுற்றபோது, அவர்களிருவரையும்) இராவணனது கிரீடத் தலைகளைத் தாக்கித் துண்டம் (செய்யமுயன்று கொத்துதல்)செய்த மூக்கினால் (அன்புமீதூர) மாறி மாறிப் பலமுறை உச்சிமோந்தான்.

இன்று-இப்பொழுது (தமிழ்ச்சொல்லகராதி). வம்மின்-வாருங்கள். துமித்தல்-துண்டம்செய்தல்-அறுத்தல். தலைகளைத் துமிக்கமுயன்று கொத்தியதைத் துமித்த என உபசரித்துக் கூறினர். ‘தலை(களைத்) தாக்கித் துமித்த’ எனக் கூட்டுக. தலைதகர்த்த என்பதும் பாடம்.

“உச்சிமோத்தல் — புத்திரவாற்சல்லியமுடையார் மிக்க அன்பினாற் செய்யுஞ் செயல்.” “புண்ணியரே என்றது, எனது நல்வினைப் பயன

போல எதிரில்வந்துவாய்த்தவர்களே யென்று கொண்டாடி விளித்தவாறும்." "பாக்கியத்தாற் போக்குகின்றேன் என்று இயைப்பின், உற்றுழி உதவலுற்ற போரிற் போக்க நேர்ந்ததையே பாக்கியமென்றதாகக் கொள்ளவேண்டும்."

சத்துருவின் உச்சியை வன்மையாகக் கோபத்தோடு தாக்கிய அதே மூக்கினால் புத்திரரின் உச்சியை மென்மையாக அன்புடன் மோந்தானென வியப்புத்தோன்றக் கூறிய கவிசாதுரியம் மெச்சத்தக்கது.

'மோந்தனனால்' என்னாது 'மோக்கின்றான்' எனப் புத்திரவாற்சல்லியத்தைப் புலப்படுத்தும் உச்சிமோத்தற்செயல் கண்முன் நிகழ்ந்து கொண்டிருக்கக் கண்டோன் கண்டுகொண்டிருக்கும்போதே கூறுவது போலக் கூறிய நயம் கவனிக்கத்தக்கது.

சடாயு இராமனைத் தேற்றுதல்.

[பின்பு சடாயு, "குறைவற்ற பலமுற்ற நீங்கள் இருவீரும் சீதையை நீங்கியிருந்தபோது தீங்கு நேர்ந்ததென முன்னமே ஊகித் துணர்ந்தேன். ஏன் நீங்கினீர்கள்?' என, இலக்குமணன் நிகழ்ந்த வரலாற்றைக் கூறச் சடாயு இருவரும் தேறுமாறு கூறுவானானான். "ஊழினால், 'இவ்வாறு நிகழ்வதாக' என ஏற்படுத்தப்பட்டிராத காரியம் ஒருவராலும் செய்யமுடியாதது. ஆதலாற் சீதையை இராவணன் கவர்ந்த செயல் அவனைக் கருவியாகக்கொண்டு ஊழ்செய்ததாம்."]

428 "அதிசயம்! ஒருவரால் அமைக்க லாகுமோ!
துதிஅறு பிறவியின் இன்ப துன்பங்கள்
விதிவச மென்பதை மேற்கொ ளாவிடின்,
மதிவலி யான்விதி வெல்ல வல்லமோ?"

இ-ள். "(இராமா! சீதை கவரப்பட்டது எதிர் பாராத) புதுமை(யான சம்பவம்! இது, பழவினைப்பயனாக, விதியின்செயலால் நிகழ்ந்தது; விதி இராவணனைக் கருவியாகக்கொண்டு நிகழ்வித்தது(: விதியாலன்றி, இராவணனால் அல்லது வேறு) ஒருவரால் உண்டாக்கக் கூடியதாகுமோ! (ஆகாது. சீதை பிரிவினால் உனக்கு உண்டாயிருக்கிற துன்பம் பிறப்புக்குரியதாய்ப் பிறந்தவர்கள் அடைவது சகசம். ஆதலால், வருந்தாதே. இத்தகைய எதிர்பாராத புதுமையான சம்பவங்களால் உண்டாம் இன்பமும் அத் துன்பம்போலப் பிறப்புக்குரியதே.)

பிறப்பினது இன்ப துன்பங்கள் விதிவசப்பட்டவை (=விதியின் செயலால் உண்டாருபவை; பிறப்பை ஒழித்தாலன்றி ஒழிக்கக்கூடாதவை) என்ற கொள்கையை (நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். ஒப்புக்கொண்டு விதியோடு முரணாது அதற்கிணங்கி முயற்சிசெய்வோமானால் விதிவசமான இன்ப துன்பங்களை நமக்கிணங்கியவைகளாக்கலாம். விதிவலியைக் கொண்டே விதிவலியை வெல்லும் மதிவலியாலன்றி வேறு) மதிவலியால் விதி (வலி)யை வெல்லவல்லேமாவோமோ!" (ஆகோம் என்றான் சடாயு).

அதிசயம் - புதுமை. திருக்கு - கண். திருசியம் - காணப்பட்டது. அதிருசியம் காணப்படாதது. அதிருசியம், அதிசயமென மருவியது. அதிசயமென்பது, இங்கே, முன்காணாதது, எதிர்பாராதது, புதுமையானது என்ற பொருளில் வந்தது. சீதை எவ்வாறு கவரப்பட்டாளென்பதைக் கேட்ட சடாயு, அது எதிர்பாராத புதுமையான சம்பவமென மனத்துள் நினைத்து அதனை 'அதிசயம்' (ஆனது) என்றான். துதி அறு பிறவி - புகழற்ற ஜென்மம். முத்திக்குத் தடையாயிருப்பதால், பழித்தற்குரிய பிறவியென்பான் துதி அறு பிறவி என்றான்.

காரணமின்றிக் காரியமின்று. யாவும் காரண காரியத்தொடர்ச்சி நியதி கடவாதவை. எந்த நிகழ்ச்சிகளின் திறத்தில் காரணகாரியத் தொடர்ச்சி தெரியப்படவில்லையோ, அந்த நிகழ்ச்சிகளைத் தெய்வச்செயலென்பது சகசம். தெய்வச்செயலென்பதற்குப் பிரதிபாக விதியின் செயல் ஊழின்செய லென்று உரைப்பதும் உலகவழக்கம். இதனால், விதியென்பது தெய்வசம்பந்தமுடையதென்பது தெளிவாம். இது காரணமாக, 'விதி' 'தெய்வம்' எனப்படுவதுண்டு. "ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நிபதி, விதி, யென்பன ஒரு பொருட்கிளவி." (குறள் உரை) விதி, நன்மைசெய்யும் உயிர்கள் நன்மைப்பயனை அடையுமென்ற தெய்வத்தின்விதியாம். தெய்வத்தின்விதியைத் தெய்வம் என்றது உபசாரம். தெய்வம் ஆகுபெயராய்த் தெய்வத்தின்விதியை யுணர்த்தியதெனலுமாம். கடவுளின் அடிகள் சுருக்கமாக 'அடிகள்' எனப்படுதலும், 'அடிகள்' 'கடவுள்' எனப்படுதலும்போலத் தெய்வத்தின்விதி 'விதி' எனப்படலும் 'விதி' 'தெய்வம்' எனப்படலும் ஆயினவென்க.

விதியென்பது பிரமன்பெயர்களிலும் ஒன்று. 'விதியின் தலை அரிந்த விதி' என்பதில் முந்தியவிதி பிரமனாகிய தேவனையும் பிந்தியவிதி

ளாழாகிய தெய்வத்தையும் உணர்த்தும். ...ந்த விதி, மும்மூர்த்திகள் முதலிய எல்லாச் சமயத்தெய்வங்களுக்கும் மேற்பட்டது. அதன் தன்மையை ஆராய்ந்துபார்த்தால், அது மேற்கூறியவாறு மனிதர் அறியாத காரணகாரியத்தொடர்ச்சி நியதியாயிருப்பதனோடு அவர்கள் அறிந்த காரணகாரியத்தொடர்ச்சி நியதியாயும் இருப்பதாம். அது கடவுளின்விதி, முறை, நியதி என்னலாந்தன்மைபற்றி அதற்கு விதி முதலிய பெயர்கள் வழங்கலுற்றன.

'ஸயன்ஸ்' (Science) என்ற சாஸ்திர விதிகளை அறிந்தோர் அவ் விதிகளைக் கொண்டே அவ்விதிகளினலாம் விரோதங்களை விலக்குதலும் அநுகூலங்களை அடைதலும், செய்தல்போல, [உதாரணமாக, மின்சார (Electricity) சக்தியால் நிகழும் இடியினல் கேடடையாதபடி மின் வாங்கி (Lightning Conductor) அமைத்துக் கட்டடங்களைக் காத்தல் போன்ற பிரதிகூல நீக்கமும் மின்சார விசிறி விளக்கு முதலியன உண் டாக்குதல்போன்ற அநுகூல ஆக்கமும் பெறுதல்போலக்] கடவுளின் விதிகளை அறிந்து அவ்விதிகளை உபயோகித்தே அவற்றாலாம் தீமைகளை நீக்குதலும் நன்மைகளை ஆக்குதலும் செய்ய வல்லோமாவோமென்பான் பிறவியின் இன்பதுன்பங்கள் விதிவசமென்பதை மேற்கொண்டால், மதிவலியால் விதியை வெல்ல வல்லமாவோம் என்பதை உணர்த்துதற்கு 'பிறவியின் இன்ப துன்பங்கள் விதிவசமென்பதை மேற்கொளாவிடின் மதிவலியான் விதி வெல்லவல்லமோ' என்றானென்க.

சீதையை இராவணன் கவர்ந்தது, விதியினல் நேர்ந்தது. அது உன் பிழையால் நேர்ந்ததென்று வருந்தாதே யென்ற கருத்துப் புலப்பட 'அதிசயம் ஒருவரால் அமைக்கலாகுமோ' என்று சடாயு இராமன் தேறு மாறு கூறினன். இராமன் தான் சீதையை நீங்கிய பிழையினலேயே அவள் கவரப்பட்டாளென்றுகொண்டிருந்த எண்ணம் நீங்கினலன்றி, அவன் துன்புறுதல் நீங்காதென்று கருதி, அவ்வெண்ணம் நீங்க இவ் வண்ணங்கூறினனென்க.

இராவணனல் சீதை கவரப்பட்டதுபற்றிச் சடாயு 'அதிசயம் ஒருவரால் அமைக்கலாகுமோ' என்றது, கைகேசி சூழ்வினையால் இராமன் காட்டுக்குப்போகுதல்பற்றி வசிட்டன் 'ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ' (நகர்நீங்குபடலம்-கக) 'வெவ்வினை அவள்தர விளைந்ததேயு

மன்—றிவ்வினை இலன்வயின் எய்தற்பாற்றுமன்று' (ஷை ௧௬௯) என்றதை நினைவுக்குக் கொண்டுவருகின்றது.

[மேற்கூறியவாறு சடாயு கூறிப் பின்னுங் கூறுவானாய் "விதியின் வன்மை மிகப்பெரிது. பிரமனைத் தலை அரிந்து உலகங்களனைத்தையும் படைத்த அவன் தன் அரியுண்ட தலைக்குப் பிரதிபாக ஒருதலை படைக்கமுடியாது செய்த விதிக்குச் செயற்கரியதுண்டோ? தன்னை வணங்கினார்க்குச் சகல ஐசுவரியமும் தருதலால் ஈசுவரனெனப் பேர் பெற்ற சிவனைத் தரித்திரருள் தரித்திரனாய் மண்ணோடுங் கிடையாமல் மண்டைபோட்டில் இரந்துண்ணச்செய்த விதியின்வலி பெரிது, பெரிது, மிகவும் பெரிது.* அப்படிப்பட்ட விதியின் செயலால் உனக்கு இந்தத் துன்பம் நேர்ந்தது. துன்பம் வந்தபோது அது சிந்தையைத் தயிக்கச்செய்தற் கிடங்கொடுத்தல் அறியாமைப்பாலது. தேறுதல் அடைவாயாக. சீதை கவரப்பட்டது, அவளை மீட்டற்கு நீ இராவணாதியிராக்கதரை யழிப்பாயாதலால் அரக்கர்கொடுமையால் தளர்ச்சியுற்றிருக்கும் தருமம் கிளர்ச்சியுறுதற்கும் துன்பமடைந்திருக்கும் தேவர் இன்பமடைதற்கும் ஏதுவாய்க் கேடுபோலவந்த ஆக்கமாம். அரக்கரென்னும் களைகளைக் களைந்து தேவரென்னும் பயிரைச் செழித்து வளரச் செய்து சீதையை மீட்டு இன்புற்று நீடு வாழ்வாய்.

சடாயு தன் சிறகை இராவணன் வெட்டினனென, இராமன் கோபங்கொள்ளல்.

சீதையை இராவணன் தரையோடெடுத்துச் செல்லும்போது தெரிந்து எதிர்த்துத் தடுத்துத் தாக்கி என்னாலானமட்டும் போர்புரிந்தேன். அவன் சிவனிடம் பெற்ற தெய்வவாளால் என் சிறகுகளை வெட்டினான். இந்நிலையுற்றேன்" என்ற வார்த்தை சென்று செவிக்குட்புகவே, இராமன் புருவங்கள் நெற்றிமேலேறின; கண்கள் இரத்தங்கக்குவன போலச் சிவந்தன; நெருப்புப்போலச் சுடுகின்ற நெட்டுயிர்ப்புப் புறப்பட்டது.]

---

*"குடங்கை நீரும் பச்சிலையு மிடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் கையிற் பலிதலைகொண்
டிடங்க டோறு மிரப்பாயென் றேச வார்க்கென் பேசுவனே,"
என்ற திருவிளையாடற்பாட்டு இங்கே நினைவுகூர்தற்குரியது.

இராமன் கோபத்தால் நிலைமாற, உலகங்களெல்லாம் நிலைமாறல்.

429 மண்ணகம் திரிய, நின்ற மால்வரை திரிய, மற்றைக்
கண்ணகன் புனலும் காலும் கதிரொடும் திரியக் காவல்
விண்ணகம் திரிய, மேலை விரிஞ்சனும் திரிய, வீரன்
எண்ணரும் பொருள்க ளெல்லாம் என்பது தெரிந்த தன்றே.

இ ள். (இராமன் கோபாவேசத்தால் இயல்பான சாந்தநிலை மாறிய போது) பூமி (பூமிக்குமேலுள்ள) மலை கடல் காற்று சூரியசந்திரர் தேவலோகம் (ஆகிய இவைகள்) நிலைமாற (என்பானேன், இவைகளெல்லாவற்றையும் படைத்த) பிரமதேவனும் நிலைமாறினதனால், இராமபிரான் எல்லாப்பொருள்களும் (ஆனவன்) என்ற உண்மை (அறியாதாரும் அறிந்துகொள்ளும்படி) விளங்கியது.

மண் அகம் - பூமி. நின்ற – (அசைவின்றி) நின்ற. மால்வரை - பெரியமலைகள். கண் அகல் புனல் - இடம் அகன்ற கடல் 'நீர்' என்பது போலப் 'புனல்' என்பது அடையில்லாமலே கடலையுணர்த்தும். கடற்றெய்வமான வருணன் 'புனல்வேந்தன்' என்பதில் 'புனல்' கடலை யுணர்த்துதல் காண்க. கதிர் - சூரியசந்திரர்கள் (தமிழ்ச்சொல்லகராதி) காவல் விண் அகம் – (தேவரது) காவலையுடைய விண்ணுலகம். மேலை, 'மேல்' ஐகாரச்சாரியை பெற்றது, மேன்மையென்னும்பொருட்டு. விரிஞ்சன்– பிரமன் அன்று ஏ, அசைச்சொற்கள். அன்று என்பதை ஒரு பொருளுங்குறியாத அசைச்சொல்லாகவும் ஏ என்பதைத் தேற்றப் பொருள்குறிக்கும் அசைச்சொல்லாகவுங் கொள்ளலாம்: அன்றி, 'அன்று' என்பதை (இராமன் கோபமுற்ற) 'அப்போது' என்ற பொருளுடையதாகவும் ஏ என்பதை (ச்செய்யுளில் இசை நிறைக்கவந்த) ஈற்றசையாகவுங் கொள்ளலாம்,

இப்பாட்டில் விட்டுணுவின் பரத்துவம் கூறப்பட்டது. (இராமன் கோபநிலையுற்றுச் சாந்தநிலை மாறிய) "அப்பொழுது மண்ணகந்திரிதல் முதலியவற்றின் அநுமானத்தால், 'ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்றபடி உலகமுழுதும் எம்பெருமான் சொரூபமாகவேயிருக்கு மியல்பு அறியப்பட்டதென்க."

இவ் வின்கவித்திரட்டிற் பாலகாண்டத்திற் கடவுள்வாழ்த்துக் கவியுரையிற் கம்பரது கடவுட் கொள்கை ஆராயப்பட்டது, அது இங்கேயும் ஆராயத்தக்கதாயிருக்கின்றது.

கம்பர், பிறப்பாலோ, வளர்ப்பாலோ, பிறப்புவளர்ப்பிரண்டினாலுமோ, வைணவராயிருந்திருக்கலாம்; அல்லது சைவராயிருந்திருக்கலாம்; அல்லது வேறு சமயியாயிருந்திருக்கலாம். அவர் எச்சமயத்தைச் சார்ந்திருந்தாலும் அச்சமய சம்பிரதாயங்களைத் தழுவி யொழுகி அச்சமயிகள் பலரோ டொருவராய் அவரோடு பொருந்த இருந்திருப்பாரென்பதினும் தடையில்லை.

மிகமிகப் பலரான கண்ணில்லாரும் மிகமிகச் சிலரான கண்ணுள்ளாருஞ் சேர்ந்தாய ஒரு கூட்டத்தில் பிந்திய சிலரே சூரியனைக் காணுதல் போல, மக்கட் பரப்பில் பரஞானக்கண் படைத்த சிலரே பரம்பொருளென்னுங் கடவுளைப் பார்ப்போராய்க் கடவுளுண்மையை அறிந்தவர். மற்றைப் பெரும்பான்மை மனிதர் கடவுளுண்மையை அறியோமென்று அறியாமல் நிரீச்சுர (Godless) ராயிருக்கின்றனர்.*

கம்பர் பரம்பொருளைப் பரஞானக் கண்ணுடையராய்ப் பார்த்தநுபவித்தவராயிருந்தாலு மிருக்கலாம், அக் கண்ணில்லாமையால் பாராதவராயிருந்தாலு மிருக்கலாம்.

அவர், மேற்கூறியவாறு சார்பால் எச்சமயத்தவராயினும், அநுபவஞானத்தாலோ ஆராய்ச்சி ஞானத்தாலோ இவ் விருவகைஞானங்களாலுமோ, கடவுள், சமயங்களெல்லாவற்றையுங் கடந்த பரம்பொருளென்றும், கடவுளின் ஓரோ ரமிசபூதரே ஒவ்வொரு சமயக் கடவுளு மென்றுங் கொண்ட கொள்கைகளையுடையவராகக் கொள்ளற்பால ரென்பதனை உருபிக்க அவ ரியற்றியுள்ள இராமாயணத்தில் அகச் சான்று† கள் மிகச் சான்று‡ள்ளன. அவற்றுட் சில பின்னர்க் குறிக்கப்படும்.

கம்பர் மேற்கூறிய மேலான கொள்கையையுடைய ராதலானன்றே, அவர், விட்டுணுவின் அவதாரமான 'காசில் கொற்றத் திராமன் கதை'§ யில், இராமனைப் புகழ்தற்குரிய இடங்கள் இயல்பாகப் பலவா யிருப்பவைகளில், அவனைப் புகழுமுகத்தால் விட்டுணுவைப் பரம்பொருளாகக் கொள்ளும்படி பலமுறை கூறியிருத்தல்போல, இயல்பாக ஏகதேசமாகச் சிவனைப்பற்றிக் கூற நேர்ந்தபோது சிவன் பரம்பொருளெனக் கருதும்

---

* "........with the exception of those who have rare spiritual gifts, the generality of men, without their knowing it, are godless." Rabindranath Tagore's Presidential Message to the Parliament of Religions (vide page 3, Vol. VII, No. 1 of the Visva Bharati Quarterly).

†சாட்சி, ‡மிகுந்து. §கம்பராமாயணம். சிறப்புப்பாயிரம்,

படி கூறியிருக்கின்றார். 'பற்றவா வேரொடும் பசை அறப் பிறவிபோய்—முற்றவை லுணர்வுமேல் முடுகினர் அறிவுசென் —றுற்றவானவன்' எனத் தாடகைப் படலம் ந-ம் கவியில் வருதல் காண்க.

சீதை, "செங்கண்மால் நான்முகன் சிவனென் றேகொலோ—எங்கள் நாயகனையும் நினைந்ததேழை நீ" (நிந்தனைப்படலம் சகூ) என, இராவணனை நோக்கிக் கூறியது, இங்கே ஆராய்தற்குரியது. செங்கண்மாலின் அவதாரமான இராமனைச் செங்கண்மாலென நினைந்தாயோ வென்பதன் பொருள் இராமன் திருமாலினும் அதிக னென்பது தெளிவாம். இவ்வாறுகூறியதில் கம்பர்கருத்து யாதோவெனின், பரம்பொருளின் அமிசம், இராமாவதாரகாலத்தில், திருமாலையுள்ளிட்ட மும்மூர்த்திய ரெவர்பாலினும் அதிகமாக இராமன்பாலிருந்த தென்னலாம்.

ஒரு நதி மூன்று கிளைகளாய்த் திரும்பவும் ஒன்றுசேர்ந்து ஒரே நதியானதொப்ப, 'யாரினும் உயர்ந்தமூலத்தொரு'*மூர்த்தி 'செங்கண் மால் நான்முகன் சிவன' என்னும் திரிமூர்த்திகளாகி 'ஆலமும் மலரும் வெள்ளிப்பொருப்பும் (வீற்றிருந்த அவ் விருக்கைகளை)விட்டு (இராமனென்னும் ஒரு மூர்த்தியாக) அயோத்திவந்தான்'† என்றதனாலும், இராமனை மும்மூர்த்திகளில் எவரும் தனியாக ஒப்பாகார் 'ஒன்றுசேர்ந்தால்மட்டும் ஒப்பாவாரென' மூளரிமேல் வைகுவான் முருகற்றந்த அத்—தளரியல் பாகத்தான் தாம ரைக்கணன்—அளவிலொன் றுவரோயன்றி ஐயமில்-கிளவியர் தனித்தனி கிடைப்ப ரோதுனை'‡ என்றதனாலும், கம்பர் கருத்து, பரம்பொருள் திரிமூர்த்திக ளெவர்பாலினும் அதிகமாக இராமன்பால் முனைந்துநின்றதாமென்பது வலியுறுதல் காண்க.

எச் சந்தர்ப்பத்தில் யார்பால் பரம்பொருள் முனைந்துநிற்கின்றதோ அச்சந்தர்ப்பத்தி லவரைப் பரம்பொருளெனக் கம்ப ருபசரித்துக்கூறுவர். உதாரணமாக, அநுமனைப் பற்றி இராமன் இலக்குமணனைநோக்கி 'என்னும்—நாட்படா மறைகளாலும் நவைபடா ஞானத் தாலும்—கோட்படாப்பதமே ஐய குரக்குருக்கொண்ட தென்றான்'$ என்பதைக் காண்க.

இராமன் தேவர்மீது கோபங்கொள்ளச் சடாயு சாந்தப்படுத்தல்.

[கோபாக்கிராந்தனான இராமன், சடாயுவை நோக்கித் "தனியாயிருந்த சீதையை அறிவற்ற அரக்கன் பற்றிக்கொண்டுபோகவும்

---

*பரசுராமப்படலம் உஅ. †பிணிவீட்டுபடலம் அ0. ‡கலன்காண்படலம் கஈ. $ அநுமப்படலம் ந-ஈ. நாட்படா — நாட்செல்லாத — இளமைமாறாத. நவைபடா—குற்றப்படாத—குற்றமற்ற. கோட்படா—(அறிந்து) கொள்ளப்படாத. பதம்—பொருள் (இலக்கியச்சொல்லகராதி). குரக்கு உரு—குரங்கு வடிவம்,

நீ இந்நிலையுறவும் ஒன்றுஞ் செய்யாமற் பார்த்துக்கொண்டிருந்த தேவர்களைத் தேவலோகத்தோடு அழிப்பேன், பார்!" என்றான். இராமன் கோபங் கண்டு இலக்குமணனே அஞ்சினானென்றால், அதன் கொடிய தன்மையைக் கூறுவானேன். அப்போது சடாயு, முன்பு இராமன் தான் காவாதகுற்றத்தால் சீதை பற்றுண்டாளென்று வருந்திய வருத்தம் தணியக் கூறியதுபோல இப்போது அவன் தேவர் தடாத குற்றத்தால் சடாயு வெட்டுண்ணும்படி நேர்ந்ததென்று சீறுஞ் சீற்றம் தணியக் கூறுவானாய், "இராமா! கோபியாதே. அரக்கரால் அடக்கப்பட்டு அல்லற்பட்டுக்கொண்டிருக்கும் தேவர்கள் உன்னால் அவ்வரக்கர் அழிக்கப்படுவதை எதிர்பார்த்திருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் எப்படி இராவணனை எதிர்ப்பார்கள்? சீதை தனிமையுறுதற்கு நீயே காரணனாய் மான்பின்சென்று இக் குலப்பழியை விளைத்துவிட்டுத் தேவரைச் சீறலாமோ? சீறாதே. சீதையையும் தேவரையும் சிறைமீட்டு வேறுள தீங்குகளும் நீங்குறச்செய்து நீடுவாழ்வாயாக" என்றான். இராமன் சடாயுசொல்லைத் தசரதன்சொல்லாகத் தலைமேற்கொண்டு, அரக்கர் வருக்கம் அனைத்தையும் அழிப்பதே இனிச் செய்யத்தக்கதென்று சினமாறினான். பின்பு "'தந்தைசொன்மிக்க மந்திரமில்லை'. உன்சொற்படியே செய்வேன். இராவணன் எங்கே போனான்?' என்றான்.

சடாயு சாக, இராமலக்குமணர் தகனமுதலிய சரமக்கிரியை செய்யச் சாயங்காலமாதல்.

அப்போது, சடாயு, உடல் சோர்ந்து, உணர்வு ஒப்ந்து, ஒன்றும் உரையாளாய் உயிர் நீங்கினான். இராமலக்குமணர் அளவற்ற துயருற்று அழுதார்கள். இராமன், "இளையோய்! நம் சனகபிதாவை நாட்டிற் பறிகொடுத்தோம். சுவீகாரபிதாவைக் காட்டிற் பறிகொடுத்தோம். இனி என்செய்வோம்" என்றான். இலக்குமணன், "சீதையைக் கவர்ந்து தாதையைக் கொன்ற பாதகனைக் குலத்தோடு தொலைத்திடுதலே செயத்தகுவதாம்" என்றான்.

பின்பு, இருவரும் அகிற்கட்டை சந்தனக்கட்டைகளை அடுக்கிய சிதையின்மேல் சடாயுவின் சரீரத்தை யேற்றித் தகனமுதலிய சகல பிதிர்க்கடன்களையும் செய்து நிறைவேற்றினார்கள். அப்போது, சூரியன், தன் குலத்தவனான சடாயுவுக்குத் தானும் சரமக்கிரியைசெய்தற்கு நீராடப்போவான்போல மேற்றிசைக் கடலைமேவி, அதனுள் முழுகுவான்போல மறைந்து அத்தமனமானான்.

சடாயு உயிர்நீத்த படலம் முற்றிற்று.

[தொடரும்.]

வே. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஸ்ரீ:

மதிப்புரை.

தமிழ்ப்பேரகராதி:—இதன் மூன்றுந்தொகுதியின் ஐந்தாம்பகுதி வெளிவந்திருக்கிறது. இப்பகுதியில் 'தம்பனகுளிகை' முதல் 'திஷ்யம்' வரையுள்ள வார்த்தைகளுக்கு வழக்கம்போல் தெளிவாகவும் மேற்கோள் விளக்கங்களுடனும் பொருளெழுதப்பட்டுள்ளது. விலை. ரூ 2. விலாசம்—The Madras Law Journal Office, Post Box 604, Mylapore, Madras.

திருஞானசம்பந்தர்:—இது, தஞ்சை, சென்னை பாடசாலைகளின் இன்ஸ்பெக்டராபீஸ் ஹெட்கிளர்க்காக விருந்த தமிழறிஞர் ஸ்ரீமாந். சே. சிவஞானம்பிள்ளையவர்கள் எழுதியது. துரைத்தனத்தாரால் பாடப்புத்தகமாக அங்கீகரிக்கப்பெற்றது. சமயாசாரியர்நால்வருள் ஒருவரான ஞானசம்பந்தப்பெருமானது நற்சரிதத்தைச் சீரிய செந்தமிழ்நடையில் வெளியிடுவது. பெரியபுராணக்கருத்துக்களைப் பெரிதும் பின்பற்றி இலக்கண இலக்கிய வழக்கு வழிப்பட்ட சொற்றொடர்களானமைந்து, இது கற்போர்க்குக் கழிபேருவகை விளைக்கவல்லது. இதிற் காணப்படும் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் மிகவும் அருமையுடையன. நாயனருடைய வயது, அவர் காலம், அவர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரங்களின் தொகை, அவர் சமகாலத்து நாயன்மார்கள், அவர் தேவாரப் பதிகங்களின் ஆராய்ச்சி, சிலாசாசனக் குறிப்புக்கள் முதலிய பகுதிகள் அவற்றுள் முக்கியமாகக் குறிப்பிடற்பாலன. இவற்றால் இதன் ஆசிரியரவர்கட்குத் தமிழ்மறைக்கண்ணுள்ள நுண்ணுணர்வு இத்துணைத்தென்பது இனிது விளங்கும். பொதுவாகத் தமிழறிஞரெல்லாரும் போற்றுதற்குரிய இப்புத்தகம் பாடசாலைகளின் உயர்தரவகுப்புமாணவர்கட்குத் தமிழறிவூட்டுவது துணையாயுதவுமென்பதில் ஐயமில்லை. பிள்ளையவர்களது ஊக்கமும் உழைப்பும் மேன்மேலும் பயன்படுமாறு அவர்கட்கு ஆதரவளிப்பது அனைவர்க்கும் கடமையாகும். மிக விரிந்த ஆராய்ச்சியுடன் இருநூற்றைம்பதுபக்கங்கட்கு மேற்கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூ 1-0-0. வேண்டுவோர் சென்னை, 35, சின்னத்தம்பி தெரு, வி. குமாரசாமிநாயுடுஸன்ஸிடம் பெறலாம்.

பெரியபுராணக்கதைகள் (முதல்வரிசை):— இதுவும் ஸ்ரீமாந். சே. சிவஞானம்பிள்ளையவர்களாலேயே எழுதப்பெற்றது. இளையான்குடிமாறர் முதலிய அறுவர் நாயன்மார்களின்சரிதம் இதில் மிக அழகாகவும் சுருக்கமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இளைஞர்பொருட்டாக எளியநடையில் எழுதித் தடித்த எழுத்தில் அச்சிடப்பெற்ற இது, பள்ளியிற்பயிலும் பருவத்தே பத்திச்சுவை யூட்டுவதாகலின் இன்றியமையாத பாடப்புத்தகமாக ஏற்றுக்கொள்ளற்குரியது. விலை அணா 4. விலாசம்: 35, சின்னத்தம்பி தெரு, வி. குமாரசாமிநாயுடுஸன்ஸ், சென்னை.

கந்தபுராணவசனம் (உற்பத்திகாண்டம்):— இது மயிலாப்பூர் இராஜாராம் அண்டு கம்பெனியாரால் வெளியிடப்பட்டது. துரைத்தனத்தார் அங்கீகாரமும் பெற்றது. கச்சியப்பமுனிவரியற்றிய கந்தபுராணத்தை அடியொற்றிச் செல்லும் இவ் வசனநூல் மாணவர்களிடையே சமயவுணர்ச்சியைப் பாவச்செய்து தெய்வபக்தியை மிகுவிக்குமென்பது ஒருதலை. இது தெளிவான தமிழ்நடையில் முதனூற்கருத்துக்களை இன்பம் பயக்க எடுத்துரைக்கின்றது. பெதர் வெயிட் பேப்பரில் ஆப்டோன் படங்களுடன் அழகாக அச்சிடப்பட்ட இப்புத்தகத்தின் விலை அணா 10. விலாசம்:—இராஜாராம் அண்டு கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

கோதண்டராமன்:—இது 'கணபதி' 'குமரன்' 'கோபாலன்' முதலிய புத்தகங்களின் ஆசிரியர் ஸ்ரீமாந் பு. மு. முருகேசமுதலியாரவர்கள் எழுதியது. நடுத்தர வகுப்புக்களின் உபபாடமாவதற்கு நன்கு பொருந்துவது. இதன் தமிழ்நடை எளிமையும் தூய்மையும் உடையது. சிறுவர்கட்கு நடையெழுதுவதில் நல்லபழக்கம் உண்டாக்கவல்லது. பழைய பெரிய இதிகாசத்தைச் சுருக்கவுரைப்பதாலும் பற்பலவாய நீதிகளைப் பாங்குடன் மொழிவதாலும், இதுபோன்ற புத்தகங்களானெய்தும் பயன் அளவிடற்கரியதாம். மிகவும் வழுவழுப்பான காகிதத்தில் நேர்த்தியாகப் பதிக்கப்பெற்ற இதன் விலை அணா 8. விலாசம்: வி. குமாரசாமிநாயுடுஸன்ஸ், 35, சின்னத்தம்பிதெரு, சென்னை.

புலிகேசி அல்லது சாளுக்கிய குலதிலகன்:— இது, ஸ்ரீமாந். இலக்கைபடிக் கவுணிய இரா. சிவ. சாம்பசிவசர்மா அவர்கள் எழுதி

யது. கி. பி. ஐந்து ஆறும் நூற்றாண்டுகளில் ஆதிக்கம் பெற்றுத் தென்னாடு முழுமையும் அரசுசெலுத்திய வேந்தர்பிரானின்வரலாற்றை விரியக் கூறுவது. அக்காலத்துப் பல்லவவரசர்சரித்திரமும், தேவாலயத்திருப் பணிகளும், சைவசமயவளர்ச்சியும் பிறவும் இதனால் நன் குணரக் கிடப் பனவாம். தேசசரித்திரப் புத்தகங்கள் மிகுதியாகப் பரவவேண்டுமென்ற விழைவுடைய இக்காலத்தில் இதுவும் விரும்பி ஏற்றுக்கொள்ளற் பாலதே. விலை அணா 10 விலாசம்:—கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி, திருவல்லிக்கேணி, சென்னை.

அறநெறிவிளக்கம் (கதிர் I, II, III):-இப்பெயர்கொண்ட புத்தகங் கள் மூன்றும் சென்னை பச்சையப்பன்கல்லூரித் தமிழாசிரியர் ஸ்ரீமாந். மணி திருநாவுக்கரசு முதலியாரவர்களால் எழுதப்பெற்றன. இதிகாச புராணங்களிற்காணும் கதைகளைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் உரைக்கின்ற இவை சிறுவர்கட்கு நல்லொழுக்கமூட்டுவதிற் சிறந்த கருவிகளா மென்பது சொல்லாமையே பெறப்படும். அழகிய ஆப்டோன் படங்களோடு முத்துப்போன்ற எழுத்துக்களில் கண்கவரும் வனப்பு வாய்ப்ப இவற்றைப் பதிப்பித்திருக்கும்முறையும் பாராட்டற்குரியதே. பாடப்புத்தகக் கமிட்டியாலும் இப்புத்தகங்கள் ஏற்கப்பட்டவையென்று தெரிகின்றது. இவை முறையே அணா 5, 6, 7 ஆகத் தனித்தனி விலைக்குக் கிடைக்கும். வேண்டுவோர், கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி, திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

செந்தமிழ்வாசகம் (புத்தகம் 2, 3, 4, 5):— இவையும் ஸ்ரீமாந். மணி திருநாவுக்கரசுமுதலியாரவர்கள் எழுதியனவே. துரைத்தனத்தா ரது அங்கீகாரம் பெற்றிருத்தலால், கலாசாலைகளின் கீழ்த்தரவகுப்புக் களில் முறையே முக்கிய பாடமாகக் கொள்ளற்கு இவை பெரிதும் தகுதியுடையவை. மாணாக்கரின் அறிவு வளர்ச்சிக்கேற்பப் புதியபோதனா முறையைத்தழுவி ஆசிரியர் இவற்றை மிகுந்த கவனத்துடன் அமைத் திருப்பதாக விளங்குகிறது. பண்டைத்தமிழரசர், புலவர், போர்வீரர் முதலியோரது சரிதங்கள் இவற்றில் விரவிவருமாறு எழுதியிருப்பது, பள்ளிச்சிறார்க்குத் தமிழ்ப்பயிற்சிக்கண் உள்ளக்கிளர்ச்சியுண்டாக்கு மென்பது வெளிப்படை. இவற்றின்விலை முறையே அணா $3\frac{1}{2}$, $4\frac{1}{2}$, $5\frac{1}{2}$, $6\frac{1}{2}$ ஆகும். விலாசம்:—கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி, திரு வல்லிக்கேணி, சென்னை.

பாலவிவாஹங்களைத் தடுக்கும் சட்டம் (சாரதா ஆக்ட்):—இது 'அகில இந்திய லாஜர்னல்' பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமாந். M. S. பார்த்தஸாரதி ஐயங்கார் B A, B L., அவர்களால் தமிழ்மொழியில் முகவுரை, குறிப்பு, வியாக்கியானங்களோடு விரிவாக வெளியிடப் பெற்றது. இப்புத்தகத்தில் ஷை சட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள குறைகளும் முரண்பாடுகளும் ஆசிரியரவர்களுடைய சட்டப் பயிற்சியின் ஆற்றல்கொண்டு நுட்பமாகவும் திறமையாகவும் விளக்கப் பட்டுள்ளன. ஆங்கிலங்கல்லாதாருமடங்க இது எல்லார்க்கும் பயன்றா வல்லது. விலை அணா 6. வேண்டுவோர் திருவள்ளூர், 80, கொண்டம்மாபுரம் தெரு, அகில இந்திய லாஜர்னல் ஆபீஸ் மானேஜர் ஸ்ரீமாந் M. S. பார்த்தஸாரதி ஐயங்காரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பிரமோதூதவூ வாக்கிய பஞ்சாங்கம்:—இது, பஞ்சாங்கம் வெளியிடுவதில் நீண்டகாலமாகப் பெயர்வாய்ந்த யாழ்ப்பாணம் சோதிட பரிபாலனமடத்தினின்று வெளிவந்தது. எல்லார்க்கும் இன்றியமையாத அரிய விஷயங்கள்பல இதில் அடங்கியுள்ளன. சோதிடம்பயில விரும்புவார்க்கு அடிப்படையான அறிவையளிப்பதில் இதுவும் ஒரு சிறந்த கருவியாய் அமையத்தக்கது. விலை அணா 4 (சதம் 25) விலாசம்:—திரு இ. சி. இரகுநாதையரவர்கள், சோதிடபரிபாலன மடம், கொக்குவில் (இலங்கை).

சைவப்பஞ்சாங்கம்:—இது, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகவெளியீடு. தமிழாசிரியரும் சோதிடவித்துவானுமாகிய திரு இ. மு. சுப்பிரமணியபிள்ளையவர்களால் ஆகம முறையிற் கணிக்கப்பெற்றது. பிரமோதூதவருஷத்தின் முகூர்த்த நிர்ணயங்களையும் விரதாதி விசேடங்களையும் எல்லாமதத்தினர்க்கும் பொதுவாக எடுத்துரைப்பது. ஆயினும் பிற பஞ்சாங்கங்களினும் சிறந்து சைவர்கட்குப் பயன்றரத்தக்கதாம். விலை அணா 1½. விலாசம்:- சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 6, பவழக்காரத்தெரு, சென்னை.

ஸ்ரீ:

குருபரம்பரை.

எம்பெருமானார்வைபவம்.

[௬அ-ம் பக்கத் தொடர்ச்சி.]

இந்தவகைதேசிகர்கள்ன்றுமுதலின்றளவுஞ்
சிந்தைமகிழ்ந்தவரவர்தஞ்சிட்டர்கட்குத்திடமாக
வந்தமில்சீரெதிராசனிணையடியையகத்திருத்திப்
பந்தமுறும்வினையகற்றிப்பரகதியையடையினென. (௧0௫௧)

கட்டுரைத்தாரனைவர்களுங்காதலொடத்திறங்கிடப்ப
மட்டவிழ்பூம்பொழிற்குருகூர்மகிழ்மாறனருள்பெற்ற
சிட்டன்மெய்மெய்நாதமுனிமுதலாயதேசிகர்க
ளெட்டெழுத்தின்படிநடந்தார்க்கில்லாதவேற்றந்தான். (௧0௫௨)

வேறு.

எதிபதிக்கெவணமுண்டாய்த்தென்றிசைத்திடுகில்வேதந்
துதிசெயுமவதாரத்திற்றோன்றியஞானவேனம்
மதிசெய்மன்னிராமன்கண்ணனேற்றமாய்வகுத்தல்போல
விதிதொழுமரங்கமாதிமெய்த்திருப்பதிகளெல்லாம். (௧0௫௩)

வேறு.

ஓத்திருந்தாலுமரங்கமாநகர்க்குமோங்கியதிருமலைதனக்கும்
வித்தகச்செங்கட்பேரருளாளர்விளங்கியதிருநகர்தனக்கும்
பத்தர்களேற்றம்பகர்வதுபோலும்பற்பலவிருடிகடம்மி
லுத்தமவியாதர்பாராசரர்சுகர்சீரோங்கியநாரதர்சவுனர். (௧0௫௪)

என்றவர்க்கேற்றமானவாபோலுமிலக்குமாழ்வார்களிற்குருகூர்
மன்றலம்வகுளமாலைமார்பருக்குவந்தசீரேற்றமேபோல
வொன்றியகருணைத்தேசிகர்களிலாக்கோங்கியவுடையவர்தமக்கு
நன்றிசேரேற்றமுண்டெனவுரைத்தார்நான்மறைமுடிவினையுணர்ந்தார். ()

வேறு.

வனமிராமன்கண்ணனிவர்க்கேற்றமென்கொலெண்ணிலென
ஞானப்பிரானுமவதரித்துநலங்கொளுலகமனைத்தினையும்

தானத்தடனேயிடந்தசுரன்றளராவிறல்கொண்டுலகுய்ய
மானத்தொழிலார்பூமகளைமடியில்வைத்தாங்கபயத்தின். (௧௦௫௬)

ஏற்றந்தன்னைத்திறப்படவந்திலைசப்பமாறனதையுணர்ந்து
சாற்றுந்திருவாய்மொழிதன்னிற்சரணம்புகுந்தேனுனக்கென்ன
நோற்றநோன்பிலிருமூன்றும்பாட்டினோக்கிக்கூறுதலா
லாற்றன்மிக்கசாருத்தற்கேற்றமென்கொலெனவறையில். (௧௦௫௭)

வேறு.

ஆரணியந்தனிற்புகுநாளன்புமிகுங்குகற்கினிய
சீரணிந்ததோழனுமாய்ச்செடாயுவுக்குப்புதல்வனுமாய்
வாரணிந்தமுலைச்சவரியமுதூட்டமகிழ்ந்தருந்தி
யேரணிந்ததிருவடியோடிருந்துண்பேன்விருந்தென்ன. (௧௦௫௮)

வேறு.

ஆங்கவனுடனேயினிதிருந்தருந்தியருளலாலிராகவற்கேற்ற
மோங்குசீர்நந்தகோபனார்மதலைக்குலகுயத்திருவவதரித்த
பாங்குறுமவதாரங்களிலேற்றமென்கொலோவெனப்பகர்ந்திடுங்காற்
றோங்குசீர்ச்சரமச்சுலோகமென்றருளித்தமர்களையுய்விக்கையாலும். (௧௦௫௯)

சீரியதுரோணர்வீட்டுமாகத்திற்செறிந்திடாததனைநிந்தித்துக்
கூரியமதிசேர்விதுரன்மாளிகையிற்கோகனகத்திருச்சமைத்த
வேரியலமுதினினிதுகந்தருளியிருந்துநல்விருந்தருந்துகையால்
ஏரியல்கண்ணனேயவதாரமெடுத்தநந்தலைவர்கட்கேற்றம். (௧௦௬௦)

இத்திறங்கிடப்பத்திருப்பதிகளிற்சீரிலங்கரங்கந்திருமலைபின்
உத்தமப்பெருமாள்கோயிலுக்கேற்றமெதுவெனிலோங்கியவரங்கர்
பத்தனுமுலகசாரங்கமாமுனிவன்றன்னொடும்பாணர்தம்மோடும்
ஒத்துறக்கலந்தங்களவளாவுகையாலோங்கியவேங்கடத்துறைவார். (௧௦௬௧)

குறும்பறுத்தோங்குநம்பிக்குமன்பிற்கோதறுதொண்டைமான்றனக்கும்
உறும்பெருந்துணையாய்வார்த்தைகளுரைத்தங்குற்றிடத்துதவியபரிசாற்
பெறும்பெருமின்பமடியவர்க்களிக்கும்பேரருளாளருக்கேற்றம்
நறும்பசுந்துளபமணிமுடியுடையோராமெனத்தமைமதியாதே. (௧௦௬௨)

சீரியவன்பின்றிருக்கச்சிநம்பிக்கின்புறத்திருப்பவளத்தை
நேர்பெறத்திறந்துவேண்டியதருளிச்செய்கையானெறியுறுமூன்றுக்
கேருறுமேற்றமென்றனர்புலவரிருடிகடம்மிலைவர்க்குப்
பூர்விசையேற்றம்புகர்வதென்னென்னிற்பழுதறதவமிகுவியாதர். (௧௦௬௩)

வேதியர்க்குயிராம்வேதங்களனைத்தும்விளங்குநற்பொருள்பெறநோக்கி
யோதிமற்றதனுட்கன்மகாண்டம்விட்டோங்கியஞானகாண்டத்திற்
சோதிசேர்புருடசூத்திரத்தாலுந்துலங்கியமெய்ந்நெறிவிளக்காம்
ஆதிகாரணமாவாக்கியத்தாலுமச்சுதன்பரமெனவெவர்க்கும். (௧0௬௪)

சத்தியமுக்காலுரைத்துவேதத்திற்சாத்திரங்களில்வெளிப்பட்ட
முத்திநாயகனற்கேசவன்பரமாமல்லவைமொழிந்திடலபரம்
பத்தியானுணரிற்காணலாமென்னப்படியுளோர்க்கறிவுறவுரைத்து
வத்துநிர்ணயத்தைப்பண்ணுகையாலேமாசறுபராசரர்க்கேற்றம். (௧0௬௫)

என்னெனிற்புராணமென்னவொன்றிசைக்கிலிலங்குசீர்விட்டுணுபுராண
மன்னதற்கிணையொன்றெடுக்கவுந்தகுமேயரிகரியெனத்தலையசைத்துப்
பன்னருநெறிசேர்சித்தசித்துடனேபழகிய*பரத்தினதியல்பை
நன்னெறிவிளங்கக்கட்டுரைத்தருளவாங்கதைநவையிலாநிலைசேர். (௧0௬௬)

அன்பினாலுயர்ந்தவாளவந்தார்கண்டாசறுபராசரர்தமக்கே
யின்புறுமடிமைநானெனவிசைத்தாங்கிறைஞ்சுதற்குரியராகையினாற்
றுன்பறுசுகருக்கேற்றமென்னெனிற்றுகளறுபரீக்ஷித்துக்கேட்ப
வென்பெலாமுருகவேதசாரத்தையெடுத்துமுன்றிரட்டிவைத்திருந்த. ()

வேறு.

சீரார்பாகவதந்தன்னைச்செப்பியத்தந்தெளித்துரைத்தங்
கோரார்வத்துநிர்ணயத்தைப்பண்ணுவதுகேட்டியாவர்களு
மாராவன்பிற்சுகர்மூத்தராகவேண்டுமெனவெவர்க்கு
நேராயுரைக்கும்படிதோன்றிநிற்றலாலேயதுநிற்ப. (௧0௬௮)

வேறு.

சாற்றருமன்புமிக்கசவுனராமுனிவனாருக்
கேற்றமேதென்னின்மாயனிலங்கியதருமந்தன்னிற்
றோற்றுதன்மங்களெங்குந்துலங்குநிர்ணயங்கள்பண்ணி
யாற்றலோடெழுதலாலேயத்திறங்கிடப்பமெய்சேர். (௧0௬௯)

நாரதற்கேற்றங்கூறினாற்பெருங்குலமலாதே
பாரிடைச்சண்டாளர்க்குப்பணிசெய்சண்டாளரேனுஞ்
சீருறுதிருமாற்காளாய்ச்செஞ்சுடராழிசங்க
நேருறத்தரித்தன்பாலேநெறியுறுதிருமண்காப்பும். (௧0௭0)

* பாசுரத்தியல்பை, பி-ம்.

பன்னிருதலத்திற்சாத்திப்பகர்வருமஞ்சட்காப்பு
மன்னதினூடே*சாத்தியச்சுதன்றமமைக்கண்டாற்
சென்னியால்வணங்கித்தூயதிருமணிவடமுஞ்சாத்தி
யின்னல்சேர்வெகுளிகாமமுமேலாபமென்றிவைகணீக்கி. (க0எக)

வேறு.

நாராயணற்குக்கவிசொல்விஞாலத்திருப்பாராங்கவரே
யாராவன்பினெனமையாளுமடிகளென்னமுன்பறைந்தான்
சீராராழ்வாரதுகண்டுசேமமுடைநாதரொன்ன
வேரார்திருமாற்காம்வாக்காலெடுத்துத்துதிக்கப்படலாலே. (க0எஉ)

வேறு.

ஆங்கதுகிடப்பவாசிலாழ்வார்கள்பதின்மரிலருட்குருகூரி
லோங்குநம்மாழ்வார்க்கேற்றமென்னென்னவுரைத்திடிலாயிரஞ்சாகைப்
பாங்குறுவேதத்துட்பொருடன்னைப்பத்தியால்வடித்தெடுத்தருளத்
தாங்கியதமிழோராயிரந்திருவாய்மொழியெனத்தாணியிலெவர்க்கும். ()

ஓதுதற்கெளிதாய்வெளியிடலாலே..............................
....பயமேன்மையையும்
தீதிலாப்பிள்ளையருளியசாமச்சுலோகத்தின்சீர்மையுஞ்சிறப்பும்
வேதமந்திரத்தாலிருடிகடெளிந்துவெளியிட்டமெய்ப்பொருள்களையும். ()

வேறு.

அன்புமிக்கவாழ்வார்களருளிச்செய்தபாடலையு
மின்பவாரிநம்மாழ்வாரிசைத்ததிருவாய்மொழிகளையுந்
துன்பங்கடிந்தநாதமுனிதொகுத்தபனுவலனைத்தினையும்
பின்பெம்மாளவந்தாராம்பெரியோன்பகர்ந்தநூலினையும். (க0எரு)

வேறு.

ஓதாவின்றுடையவருமுலகச்சொல்லறவொதுக்கி
வேதாந்தசங்கிரகம்வேதாந்தசாரமெனப்
போதாந்தவேதாந்ததிபத்தைப்புரைதீர
நாதாந்தசீகீதாபாடியத்தைநலத்தினுடன். (ச0எசு)

வேறு.

மன்னுஞ்சிபாடியந்தன்னைமாசிலாதமதிமிக்கா
ருன்னுங்கெத்யத்திரயத்தையுரைத்துவிரைந்தேயுலகுய்யப்

* சாத்துமச்சுதன், பி-ம்.

பின்னுமன்பினித்தியத்தையருளிச்செய்துபிறர்சமய
மென்னுமிருளுக்காதவனாயிருந்துதிருமால்மார்க்கத்தை. (௧௦௭௭)

என்றும்பொன்றாப்படிசெய்திங்கிராமானுஜன்சீர்மார்க்கமெனக்
குன்றமெடுத்தானுள்ளளவுங்கோதிலுலகம்பதினாலு
நின்றுகூறும்படியிந்தநிலத்திற்றாபித்திடுதலினால்
நன்றிசேருமெதிராசர்க்கேற்றமெனவேநவின்றனரால். (௧௦௭௮)

வேறு.

முன்புதித்தவர்களருள்வழிநின்றமுத்தரின்முதல்வராமிவரைப்
பின்புதித்தவரிலேற்றமென்றடியேன்பேசிடக்கிடந்ததொன்றுளதோ
வென்புதித்துரோமமூளைதோன்மச்சையிவற்றினாலெடுத்துழல்சடத்தி
லன்புதிப்பித்தென்னாவியைக்காட்டியாண்டசீரெதிபதியருளை. (௧௦௭௯)

கோதிலாக்குருமானாயினார்க்கெல்லாங்குருபரனிணையடிதானே
தீதிலாத்தந்தைதாயுமாய்ச்சார்வாய்ச்செல்வமாய்க்கல்வியாயுயிராய்
வேதமாய்முடிவில்வீடுமாய்வீட்டின்மேவுசீரின்பமும்பிறவு
மோதலாநன்மையாவுமாமென்னவுபநிடதப்பொருளுரைக்கும். (௧௦௮௦)

படியுணர்ந்தப்படிபிடித்திருந்துபத்தர்களெதிபதிதன்னை
நெடியவன்றிருமாலிவனமையாளநீணிலத்துதித்தனன்முன்னம்
வடிவுடைக்கருணைவிட்டுணுசித்தன்மாசறுபீதகவாடை
யடிகளேகுருவாயிருநிலத்துறுமென்றருளியதிவனையென்றன்பால் (௧௦௮௧)

சிந்தையுளிருத்திப்பேணினார்தத்தந்தேசிகரன்றியோர்தெய்வம்
வந்தனைபுரியாரென்பதைமுன்பின்மாசறுகோட்டியூர்நம்பி
யந்தமில்குணத்தினுடையவர்புகுநாளாளவந்தார்தமைத்துதித்துப்
பந்தமதறுத்துத்தியானமாயிருந்தானவன்பெயர்பதிந்தமந்திரமாய். (௧௦௮௨)

அப்படியாகிலெதிசனாபகனாடித்தலத்தாசரித்திட்ட
செப்பரு.........ரெல்லாந்தத்தமைச்சேர்ந்தவர்தமக்காங்
கொப்பருமெதிகட்கதிபதிதன்னைபுன்னிவாழ்ந்திருமினென்றுரைப்பத்
தப்பறவவர்களுடையவர்திருத்தாடஞ்சமாய்ச்சாற்றலென்னென்னில். ()

ஆசறத்தன்னையாண்டவன்றிருத்தாளகத்தினிலிருத்தலேகுருமான்
பேசிடுமுகப்புமற்றதிகிடப்பப்பேதைமையறுத்தறிவருளுந்
தேசிகர்க்குகப்புப்பரமதேசிகனைச்சிந்தையானினைந்துவாக்காலே
மாசறத்துதித்தலத்திருமுணர்ந்தமறுவருமாளவந்தார்தாம். (௧௦௮௪)

வேறு.

சீரார்மணக்கானம்பிக்குஞ்சிறந்தவுய்யக்கொண்டார்க்கு
மோரார்மகிழ்ச்சிமிகத்தோன் றவெழிலார்பரமாசாரியனாய்
ஆராவன்பினதமுனியருட்டாமரைத்தாடுதித்திறைஞ்சி
நோய்கின் றுவீடடைந்தார்நிகரிலாதவெதிராசன். (௧0அரு)

தன்னையாண்டதேசிகர்களவர்மகிழ்ச்சிதரிப்பதற்கு
முன்னைமறைகண்முடிந்தநிலமுற்றுங்கவியின்மொழிந்ததற்கு
மன்னையினு மிக்கன்புடையவாளவந்தாரிருந்தொருநா
ளென்னைநோக்கப்பெற்றிடினனிலக்கும்பரமபதத்துக்கு. (௧0அசு)

சுருளும்படியுமுறக்கட்டித்தோன் றுமுயிர்களனைத்தினையு
மருளுஞ்சகடமுதைத்தபிரானெங்குமுலகத்து றும்வண்ணந்
தெருளுற்றேறும்படிசெய்யேனோவென்செய்யலாமென்ன
வருளிச்செய்தாராளவந்தார்தம்மைநினைந்தங்ககங்குழைந்தே. (௧0அஎ)

வேறு.

அன்றியாங்கொருநாளரங்கமாநகரிலாசறுமுடையவர்தம்பா
லொன்றியவன்பின்றொண்டர்கடமக்காங்கோங்குசீரிராகவனார்தம்
வென்றிசேரபயமேன்மையைப்பகரவெடுக்கெனவெழுந்திடனடந்தார்
நன்றிசேருறங்காவில்லியென்றுங்குநற்பெயருடையசீர்த்தாசர். (௧0அஅ)

அத்திறநோக்கியுடையவர்பிள்ளையகங்குழைந்திடவனுபவிக்கு
மித்திறமொழிகெட்டெழுந்துறநடந்ததெதன்பொருட்டென்றிசைத்தருள
வுத்தமக்குருவேவீடணாழ்வான் றன்னுயிரல்லாதியாவையுந்துறந்த
சித்தமுந்தானுமாகவந்தருகேசீரியவிராகவற்கபயம். (௧0அகூ)

புக்கனனன்றுய்வந்தகப்பட்டாய்போக்கினியெங்கெனவவர்க்குத்
தக்கவானரங்கள்மலைகள்கொண்டோங்குந்தயரதராமனார்கோட்டி
தொக்கவல்வினையேன்கேட்பதென்னென்னத்தோன் றலேயெழுந்தன
னென்றான்.]
பக்கநின்றிவணமுரைத்திடவெதிகட்கதிபணப்பத்தனைநோக்கி. (௧0கூ0)

வேறு.

அரியநிலையாயஞ்சாதேயறையக்கேட்டிமெய்ஞ்ஞானத்
துரியவீடோன்பெற்றானீயும்பெறுதியுயர்வீட்டைப்

பெரியநம்பிபெற்றால்நான்பெற்றேனெனக்காண்பேதமற
விரியும்புகழ்சேராளவந்தார்பெற்றானம்பிமேவிடுமால். (க0கூக)

அப்பாலுள்ளார்பெற்றாரேலாளவந்தாரதுபெறுவர்
தப்பாதாங்கத்திறந்தன்னைச்சாற்றக்கேளாய்தவமிக்காய்
ஒப்பாரில்லாத்திருமகளார்புருடகாரத்துளவுறுதி
யெப்பாலெவர்க்குங்களைகண்ணாயிருக்குமிருக்கின்முடிவுமதால். (க0கூஉ)

வேறு.

ஆங்கதுகிடப்பவுள்ளவாறணையிலவனியிற்சங்குசாரத்திற்
பாங்கொடெப்போதுந்தங்குவோர்களுநம்பரம்பரன்சங்கிலித்தொடரி
லோங்கியுள்பட்டுக்கிடப்பதுகாணுமுண்மையாய்நோக்கினுமொழுங்கைத்
தாங்குதேசிகர்கடொடரிலேகாணுந்தங்குதலதுதிடம்பிடித்தே. (க0கூங)

சீரியகமுகுநீருணிற்கத்தான்சிறந்தநீருண்ணுமென்றெண்ணி
நீரிருமண்பின்வீடணுழ்வானைநினைவுறுகளைகணுய்ப்புக்க
கூரியசிந்தைநால்வரைநீக்கித்தனைந்ததுகூறிடக்கேளோ
மேரியலருளிப்பாடவற்கிட்டபோதினுந்தனித்திட்டதில்லை. (க0கூச)

ஆதலால்வீடுநான்புகினீயும்பெறுவதற்கையமொன்றில்லை
கோதிலாநிலையாயத்திறமுணர்ந்தோர்குறையறமகிழ்ந்திரென்றிசைத்துத்
தீதிலாவெதிகடலைவனார்பின்னுஞ்செப்புவார்திருமகள்கோனைப்
பேதெலாமேத்தியிருப்பவர்தம்மைப்புரையறச்சாற்றியங்கிருப்பார். (க0கூரு)

சீரியதவத்தாலுயர்ந்தவரென்பர்தெசரதகுமாரனைப்பரத
னேர்பெறவேத்தியிருந்தனனவனையிளங்கியசத்துருக்கினன்முன்
னேர்பெறத்துதித்தாங்கிருந்தனனென்றிநிகரிலாச்சண்பகமாறன்
ஆரமுதனையான்றனையிருந்தேத்தியமர்ந்தனனவன்றனைப்பிரிவால். ()

அன்பினான்மதுரகவிதுதித்திருந்தானுசரம்விட்டுணுசித்தன்
என்பெலாமுருகநந்தகோன்மகனையேத்தியாங்கிருந்தனனவனைத்
துன்பெலாமகலவில்லிபுத்தூரிற்றோன்றியசுடர்க்கொடிகோதை
இன்பமார்சொல்லாலெடுத்துறத்துதித்தாங்கிருந்தனளிதுகுறிக்கொள்வாய்.

வேறு.

என்னப்பிள்ளைதனைநோக்கியிசைத்தானீரேழுலகத்தும்
தன்னெறுப்பானரத்தெரிந்துணரிற்றானேதனக்குரிகரண

மின்னொப்பானதிருமேனிவேதமுடிவிலெப்பொழுதும்
மன்னப்பட்டங்கடியவர்க்காய்மண்ணிற்போந்தமதிமிக்கான். (க0கூஅ)

எல்லாத்திறமும்பிள்ளைக்கன்றிசைத்தானென்னைப்பற்றென்னச்
சொல்லாமற்சொல்லருளியதாமதனிற்றுலங்குமெதிராச
னல்லாசிரியன்றனைப்பணிந்துதொழவேதுன்பநானிலத்திற்
கல்லாப்புல்லர்தமக்குமெனுங்கருணைதோன்றக்கட்டுரைத்தான். (க0கூகூ)

வேறு.

விருப்பமுடனப்படியேயெதிராசன்விரைமலர்த்தா
ளருத்தியுறப்பணித்தவற்குப்பணிசெய்வாரமருமிடம்
திருப்பதிகளனைத்துமெனத்திருவரங்கத்தமுதனார்
இருப்பிடம்வைகுந்தத்திலின்பமுறவெடுத்திசைத்தார். (கக00)

அப்படிவாழுடையவரையமுதுசெயப்பண்ணுவதே
செப்பருஞ்சீர்நூற்றெட்டுத்திருப்பதிசேர்திருமாலைத்
தப்பறவேகூட்டுவதத்தலைவனையேவலஞ்செய்தா
லொப்பரியதிருப்பதிகளனைத்தும்வலஞ்செய்ததொக்கும். (கக0க)

வேறு.

எனவும்பின்னும்பலசொலினும்பூதூர்வாழுமெதிபதிக்கென்
மனமும்வாக்குஞ்செய்தொழிலுங்கொடுத்தேன்மற்றையவனடியேன்
கனவுநனவுந்தானாகிக்கலந்தானெனவுங்கட்டுரைத்துத்
தினமுநினைவாய்த்திருமாலைவிளங்குந்திருவைமேன்மையுற. (கக0உ)

போற்றினன்பாவங்கவர்தம்புருடகாரங்கொண்டடியேன்
சாற்றவரியவெதிராசன்சரணம்புயமென்றலைமீதி
லேற்றிநாளுமன்னுதற்காயெனவும்வேதப்பொருடெரித்த
நூற்றந்தாதிமுடிந்தநிலத்துரைத்தானந்தநுண்ணுணர்வான். (கக0ங)

ஈசன்றன்னையுறநோக்கியிலங்குங்குரவரெடுத்திசைத்த
நேசமுடையகன்மமருள்நீங்காஞானநெகிழ்த்ததா
லாசிலாதபிரபத்தியாதியுபாயமனைத்தினையும்
மாசிலாதவெதிராசன்வசத்தாம்வண்ணம்வகுத்தெண்ணி. (கக0ச)

ஓங்குநிலைசேரவன்கழலேயடையவுபேயமெனவுன்னிப்
பாங்கொடுணரும்பிரபத்திபகாவரியமந்திரமாய்த்

தாங்குமிதயமலரிடையத்தலைவன்றன்னையுறவிருத்தி
வீங்குதிரைசூழரங்கத்திற்சூரவர்வாழ்த்தமகிழ்ந்திருந்தான். (கக0ரு)

வேறு.

அப்படியேசிலகாலமன்பர்சூழாத்தமர்ந்தபிரான்
செப்பமிகுந்தனக்குற்றதிருவயதைச்சிந்தித்தான்
இப்படியில்வயதுநூற்றிருபதும்வந்திசைந்ததென
வெப்பொழுதுந்தொழுமரங்கத்திறையருகிலொருதினத்தில். (கக0சு)

வேறு.

தன்னந்தனியேசென்றிறைஞ்சித்தாழ்ந்துதிருவைமுன்னிட்டுப்
பன்னும்பனுவல்பலபுகழ்ந்துபரனைமகிழ்வித்திருந்தளவில்
என்னநினைவிங்கெதிராசர்க்கியம்புமென்றானிலக்குமணன்
கன்னங்கறுத்தகருமுகிலேலகவிகாலத்தோர்கணப்பொழுதும். (கக0எ)

இந்தநிலத்தின்மெய்யுணர்ந்தோரிருத்தன்முன்னீதிருப்பாகும்
அந்தமில்லாக்குணத்தோனேயடியேன்றன்னையைம்புலன்கள்
வந்துதீண்டாவகைகாத்தாய்வயதிங்கொருநூற்றிருபதினிப்
பந்தமுறுமிவ்வுடறன்னைவிடுவித்திடுகவெனப்பணிந்தான். (கக0அ)

பணிந்தவெதிகடனிநாதன்பரமபதத்துக்கேகுதற்கே
துணிந்தசிந்தையுறநோக்கித்தூசீரங்கரெதுவரினுந்
திணிந்துகலங்காமுதலெனினுஞ்சேர்கொளயோத்திநகர்மன்னைப்
பணிந்துதான்முன்பிரியவவர்பட்டபாடேபட்டனனால். (கக0கூ)

மன்னர்மன்னன்றனில்வருந்திமாபனுடனேதெளிந்தந்தோ
வென்னில்………………லீலாவிபூதியெனவிரங்கி
யன்னந்திகழுமணியரங்கனன்பானேக்கியெம்மோடும்
இன்னஞ்சிலநாளினிதிருந்தங்கேகலாகாதோவென்றான். (கககO)

என்றபெருமாளிணையடியின்மீட்டுமிறைஞ்சியெதிராசன்
குன்றமெடுத்தாநிரைகாத்தாய்கொடியேனுன்னைப்பிரிவேனோ
வென்றும்பொன்றாவுடறந்துனின்பவீட்டிவினிதமர்ந்தான்
கொன்றுகித்தர்முத்தருடனுறையவிடைதந்துதவென்றார். (கககக)

ஆனவிற்றைக்கேழாநாளன்பாயமரரெல்லாரும்
வானோர்சோதிதரவருவர்மண்ணேரிரக்கவிண்டுதிப்பப்

போநாமன்னும்பெருவீட்டிலென்றுங்காரங்கர்புகழுடையத்
தானாய்நின்றான்றனக்களிப்பச்சரணாகதியையுச்சரித்தே. (௧௧௧௨)

வணங்கித்துதித்துவலஞ்செய்துமடத்திற்புக்கவெதிராசன்
குணங்கண்மலியுங்குரவர்களிற்கூரத்தாழ்வான்றிருமகனு
யிணங்குஞ்சிந்தைச்சீபட்டரெம்பார்சீடர்வருகவெனக்
கணங்கொண்டிருந்ததேசிகர்கடங்கட்கெல்லாங்களைகண்ணாய். (௧௧௧௩)

இருத்தித்தெரிசனார்த்தங்களெல்லாமருளிச்செய்துலகைத்
திருத்தியருளுமெனவறைந்துசீரார்பாகவதர்க்கெல்லா
மருத்தப்பெறவாங்கோரொன்றையருளிச்செய்தார்மற்றவர்தங்
கருத்தையறிந்துபாகவதர்வருந்திநிலத்தைக்கலிப்பாவி. (௧௧௧௪)

விழுங்கக்காட்டிக்கொடுத்தெம்மைவிட்டுப்போறாய்கொல்லோவென்
றழுங்கிப்பதைத்துமண்மீதிலாரப்புரண்டாங்கன்புருகித்
தொழுங்கைகமறையோர்தமைத்தழுவித்துன்பந்தீர்மினெனத்தேற்றி
யெழும்பல்லாண்டையவர்க்காகவிசைத்தானிசைத்தங்கேழாநாள். (௧௧௧௫)

அர்ச்சாதிமார்க்கத்தாலாசிலாதவெதிராசன்
மெச்சவானோர்புகழ்ந்தேத்தவிரிஞ்சன்முதன்மாமுனிகணங்க
....
விச்சைமருவுமாவரணமேழுங்கடந்தாங்கெல்லையிலா. (௧௧௧௬)

மூலப்பெரும்பாழைக்கடந்துமுழுகிவிரசைப்புனல்நீங்கிச்
சாலப்பரியுமமானவனார்தடக்கைசேர்ந்தாங்கொளிக்கொண்ட
கோலச்சோதித்திருவுருவங்கொண்டுவளங்கொளிர்கொள்ள
ஞாலத்தவர்கட்கிதமளித்தான்ஞானானந்தப்பெருவீட்டை. (௧௧௧௭)

மருவாநின்றவனைவர்களுமாசிலாதசெழுஞ்சோதிக்
கருமாமுகிலுங்கமலையுங்கண்டுகேர்துகண்கள்களிகூர
விருமாநிலத்தோருயிர்காத்தவெதிநாயகவென்றெடுத்தேத்தத்
திருமாமணிமண்டபஞ்சேர்ந்தான்சென்றாற்குடையாமெனுஞ்சீமான். ()

எம்பெருமானார் வைபவம் முற்றும்.

குருபரம்பரை இரண்டாங்காண்டம் முற்றும்.

உதவிப்பத்திராதிபர்,

ஒரு மறுப்பு.

சுதேசமித்திரன்பத்திரிகையில் "மூலபாடமும் உரைகளும்" என்ற தலைப்புடன் துகளன் என்ற புனைபெயர்கொண்டு திருவாய்மொழியின் பாடபேதவிஷயமாய்ஒருவரெழுதிய கட்டுரையைக் கண்ணுற்றேன். அதில் அவர் தமது ஆராய்ச்சியாலேற்பட்ட சில ஊகங்களைக்கொண்டு சில பாசுரங்களைத் திருத்தப்புகுகின்றார். அத்திருத்தங்கள் பெரிதும் பிழைபாடுடையனவாய்க் காணப்பட்டமையால் அவற்றை மறுத்தெழுதிய இம்மறுப்புரையின் பிரதியொன்று சுதேசமித்திரனில் வெளியிடுமாறு அதன் ஆசிரியர்க்கு அனுப்பப்பட்டது. அவர் அதனைத் தமதுபத்திரிகையில் வெளியிடாமல் பத்திராதிபர் கைக்கொள்ள வேண்டிய முறைக்கு மாறாக இதனால் மறுக்கப்படும் கொள்கையுடையவராகிய துகளனிடமே கொடுத்து அவர் வரைந்த சமாதானத்தைமட்டும் தமது பத்திரிகையில் வெளியிட்டமையாலும், துகளன் வரைந்த சமாதானம் கொள்ளத்தக்கதாயில்லாமையாலும் என் மறுப்பின்விவரம் எவரும் அறிய இதன்மூலம் வெளியிடலாயிற்று.

முதலில் பழையநூல்களை அச்சிட முன்வருவோர்க்கு அதன் உரைகள் பெரிதும் உதவுவனவென்றும், அதற்குத் திருவாய்மொழியையும் அதன் உரைகளையுங்கொண்டு சில வுதாரணங்கள் காட்டுவதாகவும் கூறிக்கொண்டு தொடங்கி,

"அணங்கெனவாடுமென்னங்கம்
வணங்கிவழிபடுமீசன்
பிணங்கியமரர்பிதற்றும்
குணங்கெழுகொள்கையினானே" (1-6-4)

என்னும் திருவாய்மொழிப்பாசுரத்தையெடுத்துக்கொண்டு அதன் உரையாக ஆறாயிரப்படியில் "அயர்வறுமமரர்கள் அக்ரமமாகக்கொண்டநுபவிக்கின்ற கல்யாணகுணங்கள் சேருகைக்குக் கொள்கலனாய் ஸர்வேச்வரனான எம்பெருமானை நான் அநுபவித்து ப்ரீத்யதிசயத்தாலே தைவாவிஷ்டரைப்போலே அக்ரமமாகநின்று ஆடி அவனை வணங்கி

யடிமைசெய்யும் இதுவே ஸ்வபாவமாகப்பெற்றேன் என்கிறார்" என்ற வுரையைக் காட்டி இவ்வுரையினின்றும் இப்பாசுரத்தின் நான்காமடி "குணங்கெழுகோள்கலனே" என்றிருக்கவேண்டுமென்றும் அதனால் அதனடுத்தபாசுரமும்,

"கோள்கல்கொளாமையிலாதான்
எள்கலிராகமிலாதான்
விள்கல்விள்ளாமைவிரும்பி
உள்கலந்தார்க்கோரமுதே"

என்று இப்போதுள்ள பாடத்தினும் கருத்தில் மாறுபடாமல், சொல்லின் அதிக அழகும் பெற்று மாறிவிடுமென்றுங் கூறுகிறார்.

இவர் இவ்வாறு கூறுதற்குக் காரணம் "குணங்கெழுகொள்கையினான்" என்ற அடிக்கு உரையாக ஆறாயிரப்படியில் "கல்யாணகுணங்கள் சேருகைக்குக் கொள்கலனாய்" (கொள்கலமாய் என்றே அச்சுப்பிரதியிற் காணப்படுகிறது. இங்குத் தகளன் தமது ஸௌகரியத்தின்பொருட்டுக் "கொள்கலன்" என மகரத்தை னகரமாக்கிக்கொண்டாரென்று தோன்றுகிறது) என்ற பகுதியேபோலும். கொள்கை என்ற சொல்லுக்குக் கொள்ளுதல் என்றும் ஆகுபெயாற் கொள்ளுமிடமென்றும் பொருள்கொள்ளலாம். இவ்வுரைகாரர் ஆகுபெயர்ப்பொருளைக் கொண்டனர். ஒன்பதினாயிரவுரையிலும் "குணங்கள்சேருகைக்குப் பாத்திரமாயுள்ள ஸர்வேச்வரன்" என்றுள்ளது. மூலத்திற்குத் தெளிவேற்படுமாறு பிரதிபதமெழுதுதல் உரையாசிரியர்க்கு வழக்கேயன்றிப் பலபொருட்குப் பொதுச்சொல்லாகிய மூலத்தைத் திரும்பவெழுதுதல் வழக்கன்றாம். அவ்வாறெழுதின் அவ்வுரை பயனின்றி முடியும். ஆதலால் "கொள்கை" என்ற சொல்லின் (கொள்ளுதல் கொள்ளுமிடம் என்று இருபொருள்படுகின்ற) பொதுமைநீங்கித் தெளிவுறுமாறு "கொள்கலம்" என்று விளங்கப் பொருளெழுதிச் சென்றனர். இனி மற்றையுரைகளைக் கவனிப்போம்.

பன்னீராயிரப்படியுரைகாரர் "கொள்கையினான்" என்பதற்குக் "கோட்பாட்டையுடையவன்கிடீர்" என்று கூறி, "கொள்கையென்று ஆச்ரயவிஷயமாகவுமாம்" என்கிறார். இருபத்துநாலாயிரவுரைகாரரும் இப்பகுதிக்கு "ரத்நாகரம்போலே குணங்கள்வந்துசேருகைக்கு

ஆச்ரயமாயுள்ளானென்னுதல், இக்குணங்கள்வந்து கெழுமுகையை ஸ்வபாவமாகவுடையானென்னுதல்" என்று இருவகையாற் பொருள் கூறி, மேலும், விரிவுரை கூறுகிற்பர். ஈட்டிலும் அவ்வாறே இரு பொருள் கூறப்படுகிறது. அரும்பதவுரைக ளிரண்டிலும் முதலர்த்தத்தில் (ஆச்ரயமானவன்) கொள்கலமானவனென்றும் இரண்டாமர்த்தத்தில், கொள்கையினன்—ஸ்வபாவமாகவுடையவன் என்றுங் கூறப்படுகிறது.

ஆறாயிரப்படியில் ஒருபொருளே குறிக்கப்பட்டது. அதுகொண்டு "கொள்கலன்" என்று பாடங்கொண்டால் மற்றையுரையாளர்கள் கூறிய இரண்டாம்பொருள் ஒருவாற்றானும் பெறப்படாது. "கை" என்பதனை விகுதியாகக்கொள்ளாது சொல்லாகக்கொண்டாலும் அதற்கு இடம் என்றும் சீலம் (தன்மை) என்றும் பொருளுண்டு. அதனால், "கொள்கை" கொள்ளுமிடமென்றுரைத்தற்கு ஒருகுறையுமில்லை. "கையிடம்படையுறுப்பொப்பனைசெங்கைசிறுமைசீலம்" என்பது சூடாமணிநிகண்டு. இவற்றால் "கொள்கலனே" என்ற பாடம் பொருந்தாது. "கொள்கலனன்" என்பதற்குக் கொள்கலமாகவுடையன் என்ற பொருள் எவ்வாறு பெறப்படும்? நலம் கலம் முதலிய சொற்கள் விகுதியோடு சேரும்பொழுது நலத்தான் கலத்தான் என முடிவதன்றி நலனன் கலனன் என முடிவதாய் எங்குங் காணவில்லை. இதனால் அடுத்த பாசுரத்தை மாற்றவேண்டியது மில்லை. கொள்கல் விள்கல் என்றுமாறாது "கொள்கை" "விள்கை" யென்று இப்பொழுதுள்ளவாறே யிருத்தலால் அழகுக் கொருவாற்றானும் குறையில்லை.

இன்னும், இத்திருவாய்மொழியின் ஒன்பதாம்பாசுரத்தையும், "தரும் அவரும்பயனாய திருமகளார் தருகேள்வன்" என்று மாற்றிக்கொள்ளுதல் தகும்; ஏனெனில் ஆறாயிரப்படியிலே "ப்ரதிபந்தகங் களைப்போக்கி அந்தப் பெறுதற்கரிதான ஸம்பத்தைத் தந்தருளுமிடத்தில் பிராட்டியோடே கூடநின்று தந்தருளுமென்கிறார்" என்று காணப்படுகிறதென்றும், இப்போது அச்சிலே காணப்படும் ("தருமவரும்பயனாய திருமகளார்தனிக்கேள்வன்" என்ற) பாடத்தை யேற்றுக்கொண்டால் "அவ்வரும்பயனாயதரும்" என்னும் ஆறாயிரப்படிக்கருத்துக்கு இடமில்லையென்றும், "தருமவரும்பயனாய திருமகளார்" என்று பிற்காலத் துரைகாரர்கள் கொண்டது இவ்வாறு மயங்கிய பாடபேதத்தைக் கொண்டே போலும் என்றும் கூறுகின்றார்.

இங்கு, மேற்பாட்டில்,

"கழிமின்தொண்டர்கள்கழித்துத்
தொழுமி னவனைத்தொழுதால்
வழிநின்றவல்வினைமாள்வித்து
அழிவின்றியாக்கந்தருமே"

என்று கூறி, "தருமவரும்பயனாய-திருமகளார் தனிக்கேள்வன்" என்று மேலே செல்லுகின்றது. ஆறாயிரப்படியிலும் "ஸ்வவிஷய கைங்கர்ய ப்ரதிபந்தகமான உங்கள் வினைகளைப்போக்கி நித்யஸித்தமான அந்தக் கைங்கர்யரூப மஹாஸம்பத்தைத் தந்தருளுமென்கிறார்" (முன்பாட்டுரை) என்றுரைத்து, இப்பாட்டுக்குப் பொருள்கூறுமிடத்தில் முற்பாட்டின்பொருளை அநுவதித்து "ப்ரதிபந்தகங்களைப் போக்கி அந்தப் பெறுதற்கரிதான ஸம்பத்தைத் தந்தருளுமிடத்தில் பிராட்டியோடே கூடநின்று தந்தருளுமென்கிறார்" என்று கூறப்பட்டது.

மேற்பாட்டில் "கழிமின், கழித்து, தொழுமின் தொழுதால்', என்று அநுவதித்துக்கூறித் "தரும்" என்று முடித்து, அதனையே "தரும்" என்று அடுத்தபாட்டில் அநுவதிக்கிறார். இவ் வநுவாதங்களுக்கெல்லாம் கருத்துக்களை நயம்பட விளக்கிச்செல்கின்றனர் உரைகாரர்கள். வல்வினை மாள்வித்து ஆக்கந்தருதல் பிராட்டியின் சேர்க்கையால் (புருஷகாரத்தால்). தருமவரும்பயனாய—திருமகளார் தனிக்கேள்வன் என்பதற்கு (ஆறாயிரப்படி) தரும் (—தருவான்.) எதனால்? திருமகளார்தனிக்கேள்வனாதலால் என்றும், அவ்வரும்பயனாபதரும் திருமகளார் கேள்வனாதலால் தருதற்குக் குறைவில்லை என்றும், அவ் வரும்பயனாபதரும் (தருவான்) திருமகளார் தனிக்கேள்வனாதலால் என்றும், தரும் (தருவான்) அவ் வரும்பயனாய திருமகளார் கேள்வன் (ஆதலால்) என்றும், தருமத்தின் அரிய பயனாய திருமகளார் கேள்வனாதலால் தரும் (முற்பாட்டின் முடிவு அநுவாதம்) என்றும் பலவகையாற் பொருள்கொள்ளப்படுகின்றது.

ஆறாயிரப்படி மிகவுஞ் சுருங்கியவுரையாதலால் அதனையும் மூலத்தோடொப்பவே வைத்துப் பொன்னேபோற்போற்றி அதற்கு விரோதம் வாராமலே மற்ற வுரைகாரர்கள் உரைகூறிச்செல்கின்றனர். "தரும்" என்பது முன்பாட்டிற் கிடைத்தமையால் "தருமவரும்பயனாய திருமக

ளார்" என்பதற்கு "தருமத்தின் அரிய பயனுய திருமகளார்" என்றும் ஒருவாறு பொருள்கொள்ளப்பட்டது. இது ஆறாயிரப்படியோடு ஒருவிதத்திலும் விரோதிக்கவில்லை. ஆறாயிரப்படியின் நோக்கமெல்லாம் "திருமகளார் தனிக்கேள்வன்" என்பதிலேயே. இது மழுங்கியபாடமென்கிறார். பாடம் ஒன்றும் மழுங்கவில்லை. நிற்க. மகரவுயிர்மெய்யை மெய்யாகவும் உயிர்மெய்யாகவும் நிறுத்திப் பொருள்கொண்டாற் பாடபேதமேது? பிற்காலத்து உரைகாரர்கள் என்கிறார். இவ்வுரைகளெல்லாம் அடுத்தடுத்துத் தோன்றியவைகளே. இங்ஙனம் பாடந்தவறிவிடத்தக்கவாறு கால இடையீடில்லை. ஓராண்வழியாய்வந்த உபதேச பரம்பரையில் இவ்வாறு பாடந் தவறுதற்குச் சிறிதும் இடமில்லை.

இன்னும், "தனிக்கேள்வன்" என்பதைத் "தருகேள்வன்" என்று திருத்துகிறார். ஏனென்றால் "ஸம்பத்தைத் தந்தருளுமிடத்தில் பிராட்டியோடேகூடநின்று தந்தருளுமென்கிறார்" என்ற ஆறாயிரப்படியின் அர்த்தம் இதனால் கிடைக்கவில்லையாம்; "தரும்" என்று முற்பாட்டு முடிவிலும் இப்பாட்டின் தொடக்கத்திலுமாக இரண்டுமுறை சொல்லியிருப்பதே இப்பொருள்கொள்ளுதற்குப் போதியது; மூன்றுமுறை சொல்லவேண்டுமென்ற நியாயம் யாண்டுமில்லை.

"தனிக்கேள்வன்"என்பதற்கு ஒன்பதினாயிரப்படியில் "குணாதிகனையுள்ள (சிறந்த) நாயகன்" என்றும், பன்னீராயிரப்படியில் "அத்விதீய ப்ரணயி" என்றும், இருபத்துநாலாயிரப்படியில் "அத்விதீயவல்லபன்" என்றும் உரை வகுக்கப்பட்டுள்ளது. ஈட்டிலும் அரும்பதவுரைகளிலுங்கூட இவ்வாறே தனிக்கேள்வனென்றே கொண்டு உரைகூறியிருக்க, அதனைத் திருத்துவ தெவ்வாறு? மூலத்தை அச்சிடுவோர்க்கு உரைகள் மிகவும் உதவுவன என்பதைக் காட்டவந்த இவர் உரைகளுக்குமாறாகத் தாமே மூலங்களைத் திருத்துதல் முறையன்று. தனிக்கேள்வன் என்றதின் சொல்நயமும் பொருட்சிறப்பும் உய்த்துணரத்தக்கன. தனியென்ற சொல் திவ்யப்ரபந்தங்களிற் பலவிடங்களிலும் வழங்கப்பட்டிருத்தலும் நோக்கத்தக்கது.

இனி, ஏழாம்பத்து, மூன்றாந்திருவாய்மொழியிலேயுள்ள பாசுரங்களிலே திருப்பேரை யென்றிருப்பதெல்லாம் திருப்பேரெயில் என்றே

யிருக்கவேண்டு மென்பது ஈட்டின் உரையாலே நன்கு விளங்குகிறதென்றும், ஆறுயிரப்படியிலும் அவ்வாறேயுள்ளதென்றுங் கூறுகிருர். ஆனல் நான் பார்த்தமட்டில் எல்லா மூலப்பிரதிகளிலும் உரைகளிலும் தென் திருப்பேரை யென்றே காணப்படுகிறது. ஒன்பதாம்பாட்டில் மாத்திரம் இரண்டொருபிரதியில் தென் திருப்பேரெயின்மாநகரே என்று கீழ்க்குறிப்பில் பிரதிபேதங் காட்டப்பட்டுள்ளது. இரண்டொரு உரைகளில் அப்பாட்டில் தென்திருப்பேரெயில் என்று காணப்படுகிறது. ஆறுயிரப்படியில் "தென்திருப்பேரையிலே சேர்வன்" என்றே யுள்ளது. 5, 6, 7-ம் செய்யுட்களிலும் "பேரையிற்கே" என்று ஏழாவதும் நான்காவதுமாகிய இரண்டுவேற்றுமையுருபுகளும் வந்துள்ளதனுல் அவ்விடங்களில் "பேரெயில்" என்றிருக்கலாமோவென்று ஊகிக்கலாம். ஆயினும், "அணியரங்கத்திருமுற்றம்" "அரங்கமாளிகை" என்பனபோலப் "பேரையில்" என்பதே பழைய வழக்கோ என்றெண்ணவும் இடமுண்டு. ஆதலால் இதைக்கொண்டு எல்லாம் பேரெயில் என்றே யிருக்கவேண்டுமென்ற நியமமில்லை. ஏனெனில் உறையூர் உறந்தையென்றும் அருணகிரி அருணையென்றும் மருவிவழங்குதல்போலப் பேரெயில் பேரையில் என்பனவற்றைப் பேரையென வழங்கத் தடையொன்றுமில்லை. இவ்வாழ்வாரே பத்தாம் பத்து எட்டாம் திருவாய்மொழியில் எல்லாப் பாசுரங்களிலும் பொன்னித் தென்பாலுள்ள திருப்பேர்நகர் என்னும் திவ்யதேசத்தைப் பேர் என்று வழங்கியுள்ளமையும் காண்க. பிறரும் இவ்வாறே இவற்றை முறையே பேரையென்றும், பேர் என்றும் வழங்குவர். அவற்றையெல்லாம் திருத்தப்புகுவது இயலாதகாரியம்.

இனி, ஏழாம்பத்து ஏழாந்திருவாய்மொழியில் (நான்காம் பாசுரத்தின் இறுதி) "கண்ணபிரான் புருவமவையே, என்னுயிர்மேலனவாயடுகின்றன வென்றுநின்றே" என்றும் (ஐந்தாம் பாசுரத்தின் தொடக்கம்) "என்றுநின்றே திகழுஞ்செய்ய வீன்சுடர் வெண்மின்னுக்கொல்" என்றும் இருப்பதில் அந்தாதியழகு முதிர்ச்சிபெறவில்லையென்றும், இவற்றிற் குரைகளான ஆறுயிரப்படியின் பகுதிகள் "இவை யென்னுடையபிராணன்களையெப்போதும்பாதிக்கின்றன" என்றும், "தோன்றி மறையாதே என்றும் நின்று விளங்காநின்று சிவந்தசுடரை யீனுகின்ற வெள்ளைமின்னே" என்று மிருத்தலால் நான்காவதன் ஈற்றடி "என்

னுயிர் மேலனவா யடுகின்றன நின்று நின்றே" என்றும், (ஐந்தாவதன் முதலடி) 'நின்றுநின்றே திகழும் செய்ய வீன்சுடர் வெண்மின்னுக்கொல்' என்றும் பாடமாகவேண்டுமென்று ஊகிக்கக்கிடக்கின்றது என்றுங் கூறுகிறார். "என்று நின்றே" என்று முடிந்து "என்று நின்றே" என்று தொடங்குவதில் இல்லாத அந்தாதியழகின் முதிர்ச்சி 'நின்று நின்றே' என்று முடிந்து, 'நின்றுநின்றே' என்று தொடங்கிவிட்டால் எவ்வாறு கிடைத்துவிடுமோ?

இனி இவற்றின் உரைகளை நோக்குவோம். "இவை யென்னுடைய பிராணன்களை யெப்பொழுதும் பாதிக்கின்றன", "தோன்றி மறையாதே யென்றும் நின்று விளங்காநின்று சிவந்த சுடரை யீனாநின்ற வெள்ளை மின்னே" (ஆறாயிரப்படி) என்றும், "என்றும் ஒருபடிப்படநின்று நலியா நின்றன", "ஒருபடிப்படநின்று விளங்கக்கடவதாய்......" (ஒன்பதி னாயிரப்படி) என்றும், "பாதகமாகாநிற்கச்செய்தேயும் அநித்யமாயிருப் பன சில பதார்த்தங்களுண்டிறே. இவை அங்ஙனன்றிக்கே என்றும் ஒக்கநின்று நலியாநின்றன" "என்று மொக்க மாறாதே விளங்கா நிற்பதாய்" (ஈடு) என்றும் இவ் விருதொடர்கட்கும் பொருள் காணப்படுகிறது. இவ் வுரைகளால் எவை சரியான பாடமென்பதை அறிஞர் ஊகித்துக்கொள்ள லாம். நின்று நின்று என்பதற்குச் சிலபொழுது நின்று சில பொழுது மறைந்து என்றே பொருளாம். ஆயிரம்முறை நின்றுநின்று என்றடுக்கினாலும் "என்று நின்று" என்றதன் பொருட்சிறப்பு எவ்வாறு பெறப்படும்? "என்னுயிர்மேலனவா யடுகின்றன வென்றுநின்றே" "என்றுநின்றே திகழுஞ்செய்ய வீன்சுடர் வெண்மின்னுக்கொல்" என்று இரண்டிடங்களிலும் அமைந்துள்ள மோனையழகும் கவனித்தற்பாலது. இதனை நின்றுநின்றேயென மாற்றுவதனால் அம் மோனைநயமும் இல்லையா யொழியும்.

இனி, எட்டாம்பத்து இரண்டாந்திருவாய்மொழி இறுதிப்பாசுரத் தின் ஈற்றடி "ஆதுமோர் தீதிலாகி யிங்கு மங்கு மெல்லா மமைவார்க ளாமே" என்றிருப்பது, அடுத்த திருவாய்மொழி "அங்குமிங்கும் வான வர் தானவர் யாவரும்" என்று தொடங்குவதனால் இவ்வீற்றடியும் "ஆதுமோர் தீதிலாகி யங்கு மிங்கு மெல்லா மமைவார்க ளாமே" என் றிருக்கவேண்டுமென்றும், அதன் ஆறாயிரப்படியுரையும், "இத்திருவாய்

மொழியைவல்லார் நிரஸ்த ஸமஸ்த துக்காய் அங்குமிங்கும் எல்லாப் படியாலும் பரிபூர்ணராகிறார்" என்றிருப்பதுகொண்டு இதுவே திருத்த மானபாடமென்றுங் கூறுகிறார்.

நித்யவிபூதியினும் லீலாவிபூதியின் சிறப்புக்கருதி அங்குமிங்கும் என்று (உரையின் ஸௌகர்யத்தை நோக்கி) ஆறாயிரப்படியில் மாற்றிக் கொண்டார். "அங்கு மிங்கும்" என்ற அடுத்த பாசுரத்தின் சொற்கிடக் கையையே உரைநடையில் அமைத்துக்கொண்டாரெனினு மிழுக்கில்லை. ஆழ்வார் ப்ரத்யக்ஷமாகிய இம்மையை முற்கூறி அப்ரத்யக்ஷமாகிய வீட் டினைப் பிற்கூறினார். கருத்தைத் திரட்டியுரைக்கும் ஆறாயிரப்படியின் சொற்கிடக்கை கொண்டு மூலத்தின் சொற்கிடக்கையை மாற்றத் துணிவது பொருந்தாது.

"இங்குமங்கும்—இந்தவிபூதியிலும் அந்தவிபூதியிலும்" என்று பன்னீராயிரப்படியிலும் "இஹலோகத்தோடு பரலோகத்தோடு வாசியறக் குறைவற்றிருப்பர்கள்" என்று ஈட்டிலும் உரை காணப்படுகிறது. அன்றியும், இது எண்சீராசிரியவிருத்தம். இதனை முன் நான்குசீர் ஒருநிறுத்தாகவும், பின் நான்குசீர் ஒருநிறுத்தாகவும், படிப்பதுவழக் கம். ஈங்கு ஓசையின்பம் பயக்கப் பின்நிறுத்தின் தொடக்கமாகிய ஐந் தாஞ்சீரில் "அங்கும்"என மோனையமைந்துள்ளது. எடுத்தலோசை பொருந்திநின்ற அச்சொல்லையே அடுத்த செய்யுளின் ஆதியாய்த் தொடுத் தால் இழுக்கென்னை? "இங்கும்" என்பது இச்செய்யுளில் இயல்பா யமைந்த சொல்லேயன்றி அந்தாதிக்காக முற்பாட்டிலிருந்து வந்ததன்று. இனி, "இங்குமங்கும்" என்பது "அங்குமிங்கும்" என மாறியும் அந் தாதியில் அமையலாமென்று தோன்றுகிறது. அது இன்னும் சில வழக்கு களைக்கொண்டு தீர்மானிக்கத்தக்கது. "இரவு நன்பகலும் விடா தென்று மேத்துதல் மனம்வைம்மினோ" (3 – 6-3) "வைம்மின்நும்மனத் தென்று" (3 – 6-4) என்பது போன்ற இடங்களை அவ்வாறு கொள்ள லாம். இனி, "இங்குமங்குமெல்லாமமைவார்கடாமே" என்றிருப்பதற் கேற்ப அடுத்த திருவாய்மொழி "இங்குமங்கும் வானவர் தானவர் யாவ ரும்" என்றிருக்கவேண்டுமென்று ஏன் ஊகிக்கலாகாது?

இனி, மூன்றும்பத்து ஆறுந்திருவாய்மொழி எட்டாம்பாசுரத்தில் "துயரமேதரு துன்பவின்ப வினைகளா யவை யல்லனாய்" என்றிருப்பதில்

இன்பவினை துன்பவினையிலுங் கேடுவிளைப்பது; ஏனெனில் அது துயரமேதருவது என்று த்வன்யர்த்தமாகக் கொள்ளுவதற் கிடமில்லையென்றும், அவ்வாறான தமது கருத்துக்கு இடந்தரும்படி "துயரமேதரு இன்பவினைகளாய்" (துன்பத்தைக் காணவில்லை) என்று பாடத்தைத் திருத்திக்கொள்வதற்கு ஆறாயிரப்படி முதலியவுரைகள் (இடந்தருகின்றனவென்றும், "ஸ்வாதீன புண்யபாப ஸ்வரூபனாய்" என்று ஆறாயிரப்படியிலும், "துக்கைகஹேதுவான புண்யபாபரூபகர்மங்களுக்கு நியாமகனாய்" என்று ஒன்பதினாயிரப்படியிலும், துயரமேதரு இன்பம் என்பதையே மேற்கொண்டு "துக்கஸாத்யத்வ துக்கமிச்ரத்வ துக்கோதர்க்கத்வ விசிஷ்டமாகையாலே நிக்ருஷ்ட பரிதாபகாமான சுகத்துக்கும் துக்கத்துக்கும் ஹேதுவான" (இங்கு உரைநடையைமாற்றிக்காட்டியிருக்கிறார்.) என்று பன்னீராயிரப்படியிலும் "துக்கைக ஹேதுவான புண்ய பாப ரூப கர்மங்களுக்கு நியாமகனாய்" என்று இருபத்துநாலாயிரப்படியிலும் உரைகூறப்படுதலாலும் "இன்பவினையுந் துக்கத்தைத்தரு"மென்று ஈட்டுரைகாரரும் விளக்குதலாலும் "துயரமேதரு இன்பதுன்பங்களாய்" (வினையைக் காணவில்லை) என்பதுவே நேரான பாடமாகுமன்றோ? என்றுங் கூறுகிறார்.

"துயரமேதரு" என்ற அடைமொழிக்கேற்ப இங்கு ஆழ்வார், துன்பம் இயல்பாகவே துன்பமாதலால் அதனை முன்னும், இன்பம் துன்பத்தினு லெய்தப்படுதலும், துன்பத்தின் கலப்பும், துன்பந் தந்து நீங்குதலுமாய் எப்பொழுதும் துன்பமாய்முடிதலால் இன்பத்தை அதன்பின்னும்வைத்து, "துயரமேதரு" என்பதனுடன் இரண்டுந்தனித்தனியே கூடி இரண்டுந் துன்பமேதருவன என்று விளங்கவைத்தார். இச்சொற்கிடக்கையில் தமது அழகிய கருத்துக் கிடமில்லையென்று துகளன் பெரிதும் வருந்துகிறார். இன்பவினை துன்பவினையிலுங் கேடுவிளைப்பது, ஏனெனில் அது துயரமேதருவது என்கிறார். ஆயின் துன்பவினை சிலபொழுது இன்பமும் விளைக்கும்போலும்! பொழிப்புரையாகத் திரட்டிக்கூறுகின்ற வுரையாளர் சிலர் சிறப்புப்பற்றிப் புண்ணியத்தை முன்வைத்துப் "புண்யபாபம்" "புண்ய பாப ரூப கர்மங்கள்" என் றெழுதிச்சென்றனர். "புண்ணியம் பாவம் புணர்ச்சி பிரிவென்றிவையாய்" என்று ஆழ்வாரும் பின்னோரிடத்திற் கூறியருள்வர்.

அங்கு நோக்கம் வேறு. செய்யுட்களிற் பலகாரணங்களாற் சொற்களை முறைபிறழ வழங்குவதுண்டு. இங்கு, "துயரமேதரு" என்றதற்கேற்பப் பிறழவைத்தார்.

பெரும்பாலும் பதவுரையாகவே நடைபெறுகின்ற பன்னீராயிரப் படியுரையில், "துயரமே—நிஷ்க்ருஷ்டபரிதாபத்தையே, தரு—தாக்கடவதான, துன்பம்—துக்கத்துக்கும், இன்பம்—துக்கஸாத்யத்வ துக்கமிச்ரத்வ துக்கோதர்க்கத்வ விசிஷ்டமாகையாலே நிஷ்க்ருஷ்ட பரிதாபகாமான சுகத்துக்கும் ஹேதுவான, வினைகளாய்—பாபரூபமாயும் புண்யரூபமாயுமுள்ள கர்மங்களுக்கு நிர்வாஹகனாய்" என்று உள்ளவாறே உரைகூறப்படுகின்றது. இதனைத் துளகன் தமக்குவேண்டியவாறு மாற்றிக் காட்டியிருக்கிறார். அது பெருந்தவறே யென்பதில் ஐயமில்லை. இனி ஈட்டிலும் "துன்பவினையோடு இன்பவினையோடு வாசியற இரண்டும் துக்கத்தையே பண்ணித்தருமென்றுயிற் றிருக்கிறாரிவர்; பகவத்சேஷத்வவிரோதியாய்க்கொண்டு பந்தமாகை இரண்டுக்கு மொக்குமிறே" என்று கூறப்படுகிறது. இவற்றால் "துயரமேதரு துன்பவின்ப வினைகளாய்" என்றே பாடங்கொள்ளப்பட்டிருக்கிறதென்பதொருதலை. இன்பவினையும் துக்கத்தைத்தருமென்பது ஆழ்வார்திருவுள்ளமென்று ஈட்டுரைகாரர் விளக்குவதை இவர் தமக்கு அநுகூலமாக்கிக்கொள்கிறார். 'துயரமே தரு' என்பதனோடு 'இன்பம்' என்பது நேரே தொடராமல் இடையிட்டிருப்பதனாலேயே இவ்விளக்கம் வேண்டிவந்தது. 'துயரமே தரு இன்பம்' என்றிருந்தால் இவ்விளக்கம் வேண்டற்பாலதன்று.

இன்னமும் "துயரமேதரு துன்பவின்பவினைகளாயவையல்லனாய்" என்றதிலுள்ள ஓசையினிமையும் இவர்—பாடத்தி லில்லாமையும் அறிஞர் ஊகித்துக்கொள்ளலாம். "துயரமேதரு" என்பதனோடு "இன்பம்" என்ற சொற் சேரும்போது சந்தியிற் பல இடர்ப்பாடுகள் நேருதலும் நோக்கத்தக்கது.

இதுகாறுங் கூறியவாற்றால், துளகன் திருவாய்மொழியின் பாடபேதவிஷயமாய்க் கூறியவற்றில் ஒன்றேனும் ஒப்புக்கொள்ளத்தக்கதில்லையென்று நிரூபிக்கலாயிற்று.

இங்ஙனம்,

ரெ. இராகவையங்கார்,

தலைமைத்தமிழாசிரியர்,

ஸௌராஷ்ட்ர கலாசாலை, மதுரை.

ஸ்ரீ:

ஆரியன் வாகடவெண்பா.

[மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையில் உள்ள ஓலைச்சுவடிகளில் வைத்தியஏடுகளை ஆராய்ந்ததில் ஆரியன்வாகட வெண்பா என்னும் சிறிய மருத்துவநூலின் ஏட்டுப்பிரதியொன்று காணப்பட்டது. அது கசக வெண்பாக்களில் பல கொடிய பிணிவகைக ளுக்கு எளிய சிகிச்சைமுறைகளைத் தொகுத்துக் கூறுவது. அதனை இயற்றினார்பெயர் முதலியவிவரமொன்றும் தெரியவில்லை. அதிலுள்ள பாடல்கள் பல பிழைபட்டும் சிதைந்தும் உள்ளன. ஒருபிரதியே யிருத்தலால் அவற்றைத் திருத்திச் செப்பஞ்செய்து புத்தகமாகவெளி யிட இயலவில்லை. ஆயினும் கூடியவரை திருத்தமாயிருந்த பாடல்கள் இங்கே மாதிரியாகக் காட்டப்பட்டுள்ளன. அந்நூலிற் கூறும் சிகிச்சை முறை எல்லாரும் எளிதிற்செய்து பயனடையத்தக்கதாயிருத்தலால் அந்நூற்பிரதியுடையார் கொடுத்துதவுவார்களாயின், பரிசோதித்துத் திருத்தித் தனிப்புத்தகமாக அச்சிட்டுவெளியிட உதவியாயிருக்கும்.]

காப்பு.

ஆரியனார் வாகடத்தி லாம்பொருளை யாராய்ந்து
சீரிய செந்தமிழிற் செய்யுளால்—கூரியதா
யுள்ளநிதா னக்கிரியை யோதுதற்குத் தந்திமுக
வள்ளலே யென்மனத்து வா.

நீரேற்றத்துக்கு.

அரத்தைசத குப்பைசுக்கும் ஆனநொச்சிச் சாற்றில்
இரைத்தரைத்துக் காய்ச்சியுண்ணச் செய்தால்—உரதத
தலைவலியும் பீநசமுந் தந்துளநீ ரேற்றம்
குலைகுலைந்து போமெனவே கூறு.

சுரங்களுக்கு.

கூறுகின்ற பாவட்டை கோட்டம்வெட்பால் கொத்தமல்லி
பாறுகின்ற வேலிப் பருத்திவேர்—நாறுகின்ற
நன்மிளகுங் கூட்டி நயமாய்க் கிஷாயமிடச்
சென்மமில்லை யாஞ்சுரங்கள் செப்பு.

பித்தசுரத்துக்கு.

செப்பும் புடல்கோட்டம் செய்யகொத்த மல்லிசுக்கு
மெய்ப்பான சீரகம் வில்வவேர் — தப்பாத
சிற்றமுட்டி வேருடனே சேரக் கிஷாயமிடப்
பித்தசுரம் போகுமெனப் பேசு.

கபசுரத்துக்கு.

பேசுகின்ற தூதுவளை பின்கண்டங் கத்திரிவேர்
வீசரத்தை காஞ்சொறி வெட்பூலா—மாசிலாப்
போரான முள்ளிசுக்கும் பேணிக் கிஷாயமிடச்
சீராய்க் கபசுரம்போம் செப்பு.

பித்தத்துக்கு.

பாரிசைந்த நெல்லிமுள்ளி பண்பான கூவிளைவேர்
சீரிசைந்த மல்லிசுக்குச் சீரகமும்—வேரிசைந்த
சிற்றமுட்டி நெற்பொரியுஞ் சேர்ந்த கிஷாயமுண்ணப்
பித்தம்விட்டுப் போகுமெனப் பேசு.

பித்தமருளுக்கு.

பண்ணாய் முசுட்டையிலை பாரிலுள்ள தாளியிலை
பெண்ணும் மொசுமொசுக்கை யிம்மூன்றும்—நண்ணுகின்ற
கர்த்தபத்தின் பாலிற் கரைத்தே யருந்திவிடப்
பித்தமரு ளோடுமென்று பேசு.

பித்தமயலுக்கு.

மானேகேள் கர்த்தபத்தில் வந்தபால் நாங்கூழும்
தானேநற் சர்க்கரையுந் தான்கூட்டித்—தேனே
யருந்தவே பித்தமய லாறுமென முன்னோர்
திருந்த நமக்குரைத்தார் தேர்ந்து.

எரிவாதத்துக்கு.

செப்பமெனும் பேரிலந்தை சேந்தையிலை ஆரையிலை
அப்புடனே கூட்டியரைத் தான்பாலில்—மெய்ப்புடனே
மத்திட்ட தைக்கடைந்து வந்தநுரை பூசிவரேற்
சற்றுமெரி வாதமில்லைத் தான்.

அசீரணம், சலதோஷம், சூலை, சுரங்களுக்கு.

விரைந்தே மிளகரைத்து வெந்நீரிற் கூட்டி
அருந்த அசீரணங்க ளாறும்—விரிந்த
சலதோஷம் சூலை சகல சுரமும்
பிலமேறப் போய்விடுமாம் பேறு.

விக்கலுக்கு.

பண்ணும் பருத்தி விதைப்பருப்பும் நெற்பொரியும்
எண்ணுசிறு திப்பிலியு மேலமுடன்—நண்ணுபொடி
சர்க்கரையுந் தேனுமிவை தம்மிலொக்கக் கூட்டியுண்ண
விக்கல்சத்தி போமே விரைந்து.

கல்லடைப்புக்கு.

கக்குஞ் சிறுபூளை கார்நெருஞ்சி மாவிலிங்கு
விற்கும்பே ராமுட்டி வேருடனே—ஒக்கவே
கூட்டிக் கியாஷமிட்டுக் கொள்ளவே கல்லடைப்புக்
காட்டிக் கழன்றுவிடுங் காண்.

கல்லடைப்பு நீரடைப்புக்கு.

ஈருள்ளிச் சாறுமுக்கோ டேற்றகா ரங்கழஞ்சு
சார்குக் குடத்திநெச்சந் தான்கழஞ்சு—வார்முலையாய்
ஒன்று யளாவி யுடனருந்தக் கல்லடைப்புச்
சென்றோடு நீரடைப்புந் தீர்ந்து.

விட்ட நெருஞ்சியின்வேர் வெண்சுரையின் தண்டுசுக்குக்
கிட்டு கடுத்தான்றி கீழ்க்காய்வேர்—இட்ட சிறு
பூளையின்வே ரோடு புகலுஞ் சிறுகீரை
வாளைவென்ற கண்ணாய்நீர் வார்த்து.

வார்த்தநீ ரெட்டொன்றாய் வற்றியபின் றானிருத்தே
யேற்றவெண்ணெய் மேற்போட் டிதையருந்தப்—பார்த்துத்
திகைத்தோடு நீரடைப்புச் சேர்கல் லடைப்பும்
பகைத்தோடுஞ் சொன்னேன் பரிந்து.

குத்திருமலுக்கு.

சோம்புநில வாகைவேர் துய்ய திரிகடுகும்
ஆன்பாலில் நெய்யி லரைத்ததனைக்—காம்பான
தேனிற் குழைத்தருந்தத் தீருமே குத்திருமல்
மானேய் விழியாய் மதி.

சத்திவரட்சிக்கு.

தானே வரட்சியினாற் சத்தி யுடம்புலர்த்திற்
றேனே ஒருபடிநீர் சேர்த்தடுப்பில்—மானே
உழக்காகக் காய்ச்சியதி னுற்றமவெண்ணை தேசிப்
பழத்தளவு போட்டருந்திப் பார்.

கிரந்திக்கட்டு சூலைக்கு.

மீளுமிலைக் கள்ளிதனில் வேர்த்தோலி தானுலர்த்தித்
தூளாக வேயிடித்துத் தூயபொடி—நாளுமிரு
காசத் தனையெடுத்துக் காலையினற் றேனிலுண்ணத்
தேசத்திற் றுன்போகுந் தேர்.

சூலை சொறிசிரங்குக்கு.

தானேநல் லெண்ணெயுடன் சாதிலிங்கம் வெள்ளறுகு
தேனே கருஞ்சீ ரகஞ்சேர்த்து—மானே
அறிவுடனே காய்ச்சி யருந்தவே சூலை
சொறிசிரங்கு போமெனவே சொல்.

பெரும்பாட்டுக்கு.

பரிந்துமுக்கா வேளையின்வேர்ப் பட்டையுமே கூட்டிச்
சிறந்தபச்ச ரிக்கழுநீர் சேர்த்துத்—திருந்த
அரைத்ததனை மூன்றுகழஞ் சந்திசந்தி கொள்ள
உரைத்தபெரும் பாடுகெட்டோடும்.

[தொடரும்.]

உதவிப்பத்திராதிபர்.